# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


MARA PUBLIC LIB
APR 1967
MADRAS



மகாவிஷ்ணுவும், தேவியும்

மாலை 8] பராபவ வைகாசி—ஜூன் 1966 [மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு



மாயூரத்திற்கு அடுத்த **தேரழுந்தூரில்**, நிகழ்ந்த **கம்பர்** திருவுருவ அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் மத்திய சமூக நலத் துணை அமைச்சர் திருமதி **மரகதம் சந்திரசேகர்** அவர்கள் கலந்து கொள்ளுதல் ([illegible]—4—66)

---

## பொருளடக்கம்


1. தொல்காப்பியர்
2. விடை தெரியுமா?
3. விடை விளக்கம்
4. சிவஞான போத தெளிவுரை
5. சங்கற்ப நிராகரணம்
6. அகர முதல எழுத்தெல்லாம்
7. சித்தர்களும் சித்த மருந்தும்
8. ஆதிபகவன்
9. இன்ப வாழ்வின் இயல்
10. மதிப்புரை
11. திருப்பாவையின் உள்ளுரை பொருள் ஆராய்ச்சி
12. வைஷ்ணவ குரு பரம்பரை


---

**ஆண்டுச் சந்தா ரூ 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்த மாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. — ஆசிரியர்

CONNEMARA PUBLIC LIBRARY
9 - JUN 1966

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] பராபவப சித்திரை-ஜூன் [மணி 9

# தொல்காப்பியர்

**முன்னுரை:**

தொல்காப்பியர் தமிழ்ப் பெருஞ் சான்றோர்களிலெல்லாம் தலைசிறந்த ஒருவர். தமிழ்த் தாயின் தலையாய தனிமுதற் பெரும் புதல்வர் எனத் தொல்காப்பியரைக் குறிப்பிடலாம். இஞ்ஞான்று நம்மனோராற் சிறந்தோராக அறிந்து பாராட்டப் பெற்றுவரும் நூலாசிரியர்கள் பலருள்ளும், மிகவும் பழமை வாய்ந்த நூலாசிரியர் தொல்காப்பியரே. தமிழ்மொழி தழைக்க அரும்பெருந் தொண்டுகள் புரிந்த அறிஞர்கள் யாவரினும் மேலாயவர் அவரே எனலாம்; தமிழர்களிலேயே தலையாய பெருந் தமிழர், தலையாய மாபெரும் ஞானி என அவரைப் புகழ்தல் பெரிதும் பொருந்துவதாகும். தொல்காப்பியரின் விளைவாற்றல், மிகப் பன்னெடுங் காலமாகத் தமிழ்மொழியின்கண் பிரிவற விரவிப் பெரிதும் ஊடுருவி நின்று, இன்றளவும் குன்றாது ஓங்கும் எழில் ஒளி வீசித் திகழ்ந்து வருகின்றது.

சங்ககாலப் பெருமக்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய சமய குரவர்களும், பிற்காலப் பெருங் கவிஞர்களுமெல்லாம் ஒருசேரத் தொல்காப்பியர் வகுத்தருளிய செந்தமிழ்ச் செந்நெறி பிறழாமல் போற்றித் தழுவியே ஒழுகியுள்ளனர். தொல்காப்பியர் நூலாருள் நூல்வல்ல பேராசிரியர். மனித முயற்சி யளவினுற் கல்விப் புலமை கைவந்த ஏனையோர் போலாமல் தெய்வப் புலமை சிறந்து திகழ்ந்த தொல்லாணை நல்லாசிரியர்; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்; பொறிவாயில் ஐந்தவித்த திறலர்; பல் புகழ் நிறுத்த படிமையோர். முக்குண வயத்தால் முறை மறைந்து அறையும் நூலுரை போதகாசிரியர் போலாமல், சிவஞான முனிவரர் புகழ்தற்கேற்பத் "**தவத்தான் மனந் தூயராய்** முக்குணங் களையும் கடந்து இறைவனருள் பெற்றுடையவர்"; நிறைமொழி மாந்தர்; பிழைபடாப் பெற்றியர்; இமயமும் பொதியமும் போலும் பெருநிலையில் தமிழ்மலை எனப் பிறங்குபவர்.

"ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்" என்று உரையாசிரியர்கள் அனைவரும் ஒருமுகமாகப் புகழ்ந்து போற்றும் பெருமையினர் அவர்! தமிழ் மொழிக்கண் உயர்வற உயர்ந்துள்ள மேலாந்தரமான

நூல்களிலெல்லாம் மேம்பாடுமிக்கு விளங்குவது தொல்காப்பியர் இயற்றிய **தொல்காப்பியம்** என்னும் விழுமிய முழு முதல் இலக்கண நூலேயாகும். அதன் அருமை பெருமைகள் கருதி உரையாசிரியர்கள் அதனைத் "தொல்காப்பியக் கடல்" என்றே குறிப்பிட்டுப் போற்றி யுரைப்பரெனின், அத்தகைய மாட்சிமை மிக்க அரும்பெரு நூலினை இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியரின் சிறப்பு, இனையதென எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

### தொல்காப்பியரும் திருவள்ளுவரும் :

உலக மக்களுக்குத் திருவள்ளுவரின் பெருமை ஓரளவு இன்று தெரிந்துள்ளது, ஆனால் தொல்காப்பியரின் பெருமையினை உலகம் இன்னும் போதிய அளவு உணர்ந்துகொண்டிலது. உலகமெலாம் ஒருமுகமாக உயர்த்தெடுத்துப் பாராட்டி யுரைக்கும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமே, ஆசிரியர் தொல்காப்பியனாரின் அடிச்சுவடு பின்பற்றிச் சென்றனரெனின், வேறு பிறிது கூறுதலும் வேண்டுமோ?

(1) 'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப' எனத் தொல்காப்பியர் சுட்டியதனை ஒட்டியே யன்றோ, திருவள்ளுவர் தமது திருக்குறளில் **அறம் பொருள் இன்பம்** என்னும் மும்முதற் பொருளையும் விளக்கத் தலைப் பட்டார்?

(2) 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' எனத் தொல்காப்பியனார் விதித் ததனன்றோ, அகரத்தின் தலைமை தேற்றி 'அகரம்முதல எழுத்தெல்லாம்' எனத் திருவள்ளுவர் துணிந்துரைத்தற் கேதுவாயிற்று?

(3) 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் எதிரொலி போன்றதன்றோ, 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்னும் திருக்குறள் இலங்குகின்றது?

(4) 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' எனத் தொல்காப்பியர் கூறியதின் நுட்பம் ஓர்ந்தன்றோ, 'மரம்போல்வர் மக்கட்பண்பில்லாதவர்', 'உறுப்பொத்தல்மக்கள் ஒப்பன்றால்' எனத் திருவள்ளுவர் அருளிச் செய்வாராயினர்!

அ(5) 'இழுமென் மொழியான் விழுமியது நுவறல்' எனத் தொல்காப்பியர் குறித்ததனையே 'தொல்வரவும் தோலும் கெடுக்கும்' என்புழித் திருவள்ளுவர் தழீஇயினர்!

(6) 'ஒன்றியுயர்ந்த பாலதாணை' எனவும், 'பால்வரை தெய்வம்' எனவும் தொல்காப்பியர் சுட்டியதே, **ஊழ்** எனத் திருக்குறளின்கண் தனி இயலாக அமைத்து விரித்துரைக்கப்படுவதாயிற்று!

(7) 'அறக்கழிவுடையன பொருட்பயம் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப' என்னும் தொல்காப்பியமே 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' எனத் திருக்குறள் புகலுதற்கு ஆதரவு தந்தது!

(8) 'நிலந்தீநீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' எனத்தொல்காப்பியர் அருளியது, 'சுவை ஒளி ஊறோசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு' எனவரும் திருக்குறட்கு அரண் செய்தது!

(9) 'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்' எனப் போதரும் தொல்காப்பியர் கூற்றே, 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல' என்னும் குறளைத் தோற்றியது!

(10) களவு கற்பு என இரு பிரிவாக வகுத்து விளக்கப் பெற்ற திருக்குறட் **காமத்துப்பால்** முழுவதுமே, திருவள்ளுவர் தொல்காப்பியரை எத்துணை யளவுக்குப் பின்பற்றித் தழீஇச் சென்றுள்ளார் என்பதற்குச் சான்று பகரும்!

செந்தமிழ் வானத்தில் திங்களும் ஞாயிறும்போல் இணையற்றுத் திகழ்பவர்கள் திருவள்ளுவரும் தொல்காப்பியரும் ஆவர்; திங்கள் ஞாயிற்றினிடமிருந்து ஒளி பெறுதல் போலத் திருவள்ளுவர் பல கருத்துக்களைத் தொல்காப்பியரிடமிருந்து தழீஇக் கொண்டுள்ளனர் என்பது இவ்வாற்றாற் செவ்விதிற் புலனாகும்.

**சமய ஆசிரியர்கள் :**

இம்மட்டோ! ஞாயிற்றினொளி எவ்வாற்றானேனும் படராத இடம் இவ்வுலகத்தில் யாண்டும் இன்மைபோல, தொல்காப்பியரின் விளைவாற்றல் எவ்வாற்றானேனும் இயையப்பெறாத ஒரு சிறு கூறுதல் தமிழ்மொழிக்கண் இல்லை; தொல்காப்பியரின் தூய தமிழ்ப் பெருங் கருத்துக்களை எவ்வகையாலேனும் போற்றி மகிழாத தமிழ்ச் சான்றோர்கள் ஒருவரேனும் இலர்!

(1) ஓதாமலே யாவும் ஒருங்குணர்ந்த திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது;எல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே"

எனவரூஉம் திருப்பாசுரம் தானுமன்றே, தொல்காப்பியப் புறத்திணை இயலின்கண் 'அமரர்கள் முடியும் அறுவகையானும்' என்று குறிக்கப்பட்ட **அறுமுறை வாழ்த்து** என்பதனை ஒட்டி அமைவதாயிற்று? இவ்வுண்மை,

"அமரர் கண்ணே வந்து முடியும்
எனவே, அமரர் வேறு என்பதூஉம்
பெற்றும். அவை முனிவரும்
பார்ப்பாரும் ஆனிரையும் மழையும்
முடியுடை வேந்தரும் உலகும் ஆம்.
இவை தத்தம் சிறப்பு
வகையான் அமரர் சாதிப்பால
என்றல் வேத முடிவு"

எனப் போதரும் நச்சினார்க்கினியர் உரையானும் தெளியப்படும்.

(2) இங்ஙனமே, 'அறிவாற் சிவமேயாயவர்' எனப் புகழப் பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த,

"தாயிற் சிறந்தன்று நாண்,நிதைய
லாருக்கு; அந்நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளி,திண்
கற்பின் விழுமிதன்று; ஈங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத்
தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற்
சிறந்த மதிநுதலே"

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுள், "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத், தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு" எனப் போதரும் தொல்காப்பிய நூற்பாவின் சொல்லொற்றித் திகழ்தல் காணலாம்.

(3) ஒப்புயர்வற்ற செந்தமிழ்ச் சித்தர் பெருமானாகிய திருமூலர் அருளிச் செய்த பாடல்கள் திருமந்திரம் என வழங்கப் பெற்றமை, 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என விதித்த தொல்காப்பியர் கருத்தினையுட் கொண்டே எனலாம்.

"மங்கையர்க்கு வாள்விழியிணை
தோற்ற மான்குலங்கள்
எங்கும், மற்றவர் இடைக்கிடை
மலர்க்கொடி எங்கும்:
அங்கண் முல்லையின் தெய்வம்என்
றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழும் சிவன்மகிழ்
திருமுல்லை வாயில்"

என்புழித் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும் தொல்காப்பிய நூலினை "அருந்தமிழ்" எனத் துதித்துச் சிறப்பித் தருளியுள்ளார் (4).

(5) மடலேறல் என்பது எந்தநிலையிலும் பெண்களுக்கு இல்லை; அஃது அவர்களின் சிறப்புக்கு ஒவ்வாது என்று தொல்காப்பியர் விதித்தருளினர். "எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல் பொற்புடை நெறிமை இன்மையான்" என்பது தொல்

காப்பியம். இதனைப் பின்பற்றி ஆசிரியர் திருவள்ளுவர் "கடல்அன்ன காமம் உழந்தும் **மடல்** ஏறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்" என்றருளிச் செய்தார். இங்ஙனம் தொல்காப்பியரும், அவரைத் தழுவித் திருவள்ளுவரும் வகுத்தருளிய விதியினை நினைவு கூர்ந்தே,

"அன்ன நடையார் அலர்ஏச ஆடவர்மேல்
மன்னும் **மடல்ஊரார்** என்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவது உண்டு;அதனை
யாம்தெளியோம்!
மன்னும் வடநெறியே வேண்டினோம்..."

எனத் திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமடலில் அருளிச் செய்துள்ளார்.

இன்னோரன்னவை பலவும் கருதியுணர வல்லார்க்கு ஆழ்வார்களும் நாயன்மார் களுமே போற்றி வியந்த தொல்காப்பிய ரின் சிறப்பு, இணையதெனப் பெரிதும் புலப் படா நிற்கும்.

**இலக்கணத்தின் இன்றியமையாமை:**

நம் அருமைச் செந்தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தோரும், புரிந்து போதரு வோரும் அளவிலர் பல்லாயிரவர் எனி னும், அவருளெல்லாம் தலையாய முதற் பெருந் தமிழ்த் தொண்டர் தொல்காப் பியரே யாவர் எனத் துணிந்து கூறலாம்.

'பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே' எனத் தொல்காப்பியர் தாமே கூறுமாறுபோல, நிலையாமையே நிலைபெற்ற இவ்வுலகிற் பொருள்களனைத்தும் கணந்தொறும் மாறிமாறிச் சென்று மறைந்தொழியும் தன்மையனவாகக் காணப்படுகின்றன.

அங்ஙனம் காலப்போக்கில் மாறிமாறிச் சென்று மாய்ந்து மறையும் தன்மை யினைத் தமக்கே யுரிய சிறப்பியல்பாகப் பெற்றவை மக்கள் வழங்கும் மொழிகளே யாகும். "நெருநல்(முன்னாள், முற்காலம்) வழங்குமொழி இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு" எனவும் கூறத்தக்க முறையில், மொழி வழக்காறு கள் நம்மை அறியாமலே சிறிது சிறிதாக மாறி மாறிச் சென்று, பின் அறவே மாய்ந் தொழியும் நிலையை எய்திவிடுகின்றன.

* 'நடுஅமெரிக்காவில் உள்ள நாகரிகமற்ற மக்கட் கூட்டத்தினரின் மொழியினைச் சமயத்தொண் டர்கள் சிலர் எழுதி வைக்க முயன்றார்கள். தங்கட்குக் கிடைத்த எல்லாச் சொற்களையும் கொண்டு அகரநிரல் ஒன்றையும் அவர்கள் பெரிதும் கருத்தூன்றித் தொகுத்தார்கள். பத்தாண்டுகள் கழித்து அம்மக்கட் குழுவின ரிடையே அவர்கள் மீண்டும் சென்று பார்த்த போது, அவர்கள் தொகுத்த அகர நிரலா னது பழமையாய்ப் பழுதுற்றும் பயனற்றும் ஒழிந்தமையினை உணர்ந்தார்கள். பழைய சொற்கள் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டன; புதிய சொற்கள் தலைதூக்கி நின் றன; அந்த மொழியானது அறவே மாறிப் போயிருந்தது...'

எனப் பேரறிஞர் **மாக்சுமுல்லர்** கூறுத லால், மொழிகள் எத்துணை விரைவில் மாறி மறைந்துவிடும் இயல்பின என்பது நன்கினிது விளங்கும்.

**இலக்கணமே பாதுகாப்பு:**

வடமொழியானது வேத காலத்தில் வழங்கிய நிலைக்கும், காவிய காலத்தில் வழங்கிய நிலைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. பாவுல்ப் (Beowulf) கேட்மான் (Caedmon) முதலியவர்களின் கால ஆங் கிலத்திற்கும், லேங்க்லண்ட் (Langland) சாசர் (Chaucer) கால ஆங்கிலத்திற்கும், இந்நாளில் வழங்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள இடையீடு மிகப் பெரிது. தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு முதலிய மொழிகள் ஒன்றினொன்று

(1) *"We read of missionaries in Central America who attempted to write down the language of savage tribes, and who compiled with great care a dictionary of all the words they could lay hold of. Returning to the same tribe after a lapse of ten years, they found that this dictionary had become antiquated and useless. Old words had sunk to the ground and new ones had arisen to the surface; and to all outward appearance the language was completely changed."

- *Prof. Maxmuller, The Science of Language.*

அறவே வேறுபட்டு வெவ்வேறு தனி மொழிகள் ஆக நேர்ந்தமையும் கருதற் பாலது. மக்களின் கூட்டு வாழ்க்கைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் மொழியானது திரிபுபடாமல் நிலைத்த தன்மையுடன், நெடுங்காலம் ஒரு தொடர்புபட்டு வழங்க வேண்டுவது இன்றியமையாததாய் இருக்கின்றது! அப்போதுதான் முன்னே முன்னே வாழ்ந்த மக்களின் கருத்தும் அறிவும் அனுபவமும் பிறவும் இடையறவு படாமல், பின்னே பின்னே தோன்றலுறும் மக்களுக்கெல்லாம் பயன்படும் வகையில், ஒரு தொடர்புபட்டு வழங்கி நலம் விளைத்தல் இயலும்! இங்ஙனம் இன்றாயின், தொல்காப்பியர் திருவள்ளுவர் திருநாவுக்கரசர் மெய்கண்டார் போன்ற சான்றோர் அருளிச் செய்த பொருண் மொழிகளை இன்று நாம் கற்றுப் பயனெய்துதல் இயலுமோ? எனவேதான், அவரவரும் தத்தம் தாய்மொழியை என்றும் மாறுவகையில் நின்று நிலவுமாறு இலக்கண இலக்கிய வரையறைகள் வகுத்து வளம்படுத்தி வளர்க்க வேண்டியுள்ளது. ஒரு மொழிக்குப் பாதுகாப்பாக அமைவது அதன் இலக்கணமே ஆகும்.

* "இலக்கண இலக்கிய நூல்களும் போக்குவரவுத் தொடர்பு வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டால் இங்கிலாந்து - அமெரிக்க நாடுகளின் மொழிகள் கூட, பிரான்சு இத்தாலி ஆகிய நாடுகளின் மொழிகளைப்போல மிக விரைவில் திரிபெய்திவிடும்"

எனப் பேராசிரியர் **சாய்ஸ்** கூறுதலும் கருதியுணர்தற்குரியது.

**தொல்காப்பியர் சிறப்பு:**

இவ்வுண்மைகள் பலவும் உணர்ந்து, நம் செந்தமிழ் மொழியினை என்றும் குன்றா இளமை எழிலிற் பொலிவிக்கத் தொண்டுகள் புரிந்த சான்றோர்கள் யாவரினும், தொல்காப்பியர் தனி முதற் பெருஞ் சிறப்பு உடையவராவர்! அவர் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தார்; எழுத்தும் சொல்லும் பொருளும் நாடினார்; முந்துநூல் கண்டார்; முறைப்பட எண்ணினார்; செந்தமிழ் இயற்கை சிவணிய புலம் தொகுத்தார்; மயங்கா மரபின் எழுத்து (இலக்கியம்) முறை காட்டினார்; தொல்காப்பியம் என்னும் போக்கறுபனுவலை ஆக்கித் தந்தார்! "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" எனச் சிவஞான சித்தியார் கூறுவது போன்று, தமிழ் மொழியானது இன்றளவும் பெற்றுள்ள வாழ்வனைத்தும் தொல்காப்பியரின் தொண்டால் விளைந்த ஆக்கமேயாகும் எனத் துணிந்து கூறலாம். இங்ஙனம் தொல்காப்பியர் தமிழுக்குச் செய்தருளிய "நீளுமித் தொண்டின் நீர்மை நினைக்கில்ஆர் அளக்க வல்லார்?"

தொல்காப்பியர் 'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவர்' என விளங்கிப் பல்புகழ் நிறுத்த படிமை (தவவொழுக்கம்) உடையவராதலின், 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்' ஆகிய **அட்டாங்க யோகம்** (சித்தி. 273) முற்றும் தேர்ந்தவர். திணைகளையும் திணைக்குரிய கருப் பொருள்களையும் விளக்குங்கால், முதற்கண் தெய்வத்தை நிறுத்திச் சிறப்பித்துக் கூறுதலின், இவர் தம் கடவுளுணர்ச்சி இனையதெனப் புலப்படும். '**வழிபடு தெய்வம்** நிற்புறங் காப்ப' '**கடவுள் வாழ்த்தொடு** கண்ணிய வருமே' '**தெய்வம் அஞ்சல்** புரையறந் தெளிதல்' என்னும் தொடர்களாற் கடவுள் வழிபாட்டில் இவர்க்குள்ள தெளிவும் உறுதியும் தெரிகின்றது.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

"சிதைவில என்ப முதல்வன் கண்ணே"

என்பதனால் தொல்காப்பியர் கூறும் கடவுள் இலக்கணம் விளங்கும். உயிர்கள் உய்தி பெறுதற்பொருட்டு இறைவனே முதற்கண் நூல்களை அருளிச் செய்வன் என்பது,

---

(2) "Destroy literature and facility of intercommunication, and the languages of England and America would soon be different as those of France and Italy"

*- Prof. Sayce.*

"ஆரணம் ஆக மங்கள் அருளினல் உருவு கொண்டு
காரணன் அருளா ஞகில் கதிப்பவர் இல்லை யாகும்;
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசங் தானச் செய்தியும் சென்றி டாவே'

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளானும் உணரப்படும்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்தஒண் பொருள் முடிபவும் பிரிவே'"

என்புழிப் "படிமை (பிரதிமை, Idol) ஆவது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன" என இளம்பூரணர் தெருட்டுதலின், கடவுளரின் உருவ வழிபாடு முதலியன தொல்காப்பியர்க்கு உடன்பாடாய்,

"படைப்பாதித் தொழிலும், பத்தர்க் கருளும்பா வனையும், நூலும்'
இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்பம் என்றும்
அடைப்பானும் அதுவும், முத்தி அளித்திடும் யோகும், பாசம்
துடைப்பானும் தொழிலும், மேனி தொடக்கானேற் சொல்லொணுதே',

என வரும் சிவஞான சித்தியார் கருத்துக்கு அரண் செய்கின்றது.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்னும் நூற்பாவால், திருமால் முருகன் இந்திரன் வருணன் முதலிய கடவுளரைத் தொல்காப்பியர் எடுத்தோதியமை காணலாம். 'சேயோன்' என்னும் சொல் முருகனையும் சிவபிரானையும் ஒருங்கே குறிக்கும். 'வேந்தன்' 'வருணன்' எனப் பட்டோர் பண்டு தமிழகத்திற்கே யுரிய கடவுளராக விளங்கினர் போலும்! 'கொற்றவை நிலை' என்னும் தொடரால் கொற்றவை (துர்க்கை, காளி) வழிபாடும் பண்டு தொட்டு இருந்து வருதல் அறியலாம்.

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந்து இசையா உயர்திணை மேன"

என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் காலத்துக் கடவுட் கொள்கையியல் பலவும் நுனித்துணரலாம். "காலம் - காலக் கடவுள். வினை—அறத் தெய்வம். சொல்-நாமகளாகிய தெய்வம். பால்வரைதெய்வம்—எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது (நியதி தத்துவம்)" எனச் சேனாவரையர், தெய்வச்சிலையார் முதலினோர் விளக்குதல் உணரற்பாலது. எனவே,

"அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போல் - அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு?"

எனச் சிவஞான போதம் தெளிவுறுத்துதற்கேற்ப, இறைவனே இருவினைகளின் பயனை உயிர்களுக்குக் கூட்டி நுகர்விப்பதன்றி, இருவினைகளும் தம்மைச் செய்தானைத் தாமே சென்றணையும் என்னும் சமணர் கொள்கை யுடையரல்லர் தொல்காப்பியர் என்பது, இதனால் இனிது பெறப்படும். இச் சீரிய கொள்கை சிவநெறிக்கே யுரிய சிறப்பியல்புடையது என்னும் உண்மையினை,

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே

> இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்
> கில்லைஎன
> உய்வகையாற் பொருள்சிவன்என் றருளாலே
> உணர்ந்தறிந்தார்''

எனப் போதரும் பெரியபுராணம் கொண்டுணரலாம். திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூலும் "செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும் உய்வான் உளன் என்று உணர்" என உணர்த்துதல் உளங்கொளத்தக்கது.

**இலக்கணத்திற் சமயக் கருத்துக்கள்:**

தொல்காப்பியர் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளுண்மையும் ஒப்பியவர் என்பது, உலகம் உயிர் உடம்பு கடவுள் **கந்தழி** என வரும் சொற்கள் சொற்றொடர்களால் நன்கினிது தெளியப்படுகின்றது. இலக்கணக் கொத்துரைச் சுவாமிநாததேசிகர், "வேண்டிய கல்வியாண்டு மூன்று இறவாது' என்புழி மூன்றனைப் பதிபசு பாசம் என்றும், தத்துவமசி வாக்கியம் என்றும், அறம் பொருளின்பம் என்றும், எழுத்துச் சொற்பொருள் என்றும், ஆண்டுகள் என்றும் உரைப்பர்'' எனக் குறிக்கும் சுவைமிகு கருத்தும் ஈண்டுப் பொன் போற் பொதிந்து போற்றத் தகும்.

இங்ஙனமே "**அறுவகைப்பட்ட** பார்ப்பனப் பக்கம்" என்பது. சிவபிரான் திருமால் அம்மை விநாயகர் முருகர் ஞாயிறு என்னும் அறுவகைக் கடவுளரை வழிபடும் சைவம் வைணவம் சாக்தேயம் காணபத்தியம் கௌமாரம் சௌரம் என்னும் அறுவகைச் சமய ஒழுகலாறுகளைக் குறித்ததாகக் கொள்வோரும் உண்டு.

நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்து பூதம் கொண்ட தொல்காப்பியர், நான்குபூதமே உடன்பட்ட பௌத்த சமயத்தினராகார்.

காஞ்சித்திணையால் உலக நிலையாமையை வற்புறுத்திய தொல்காப்பியர், உலகமானது தோற்றமும் ஒடுக்கமும் இன்றி என்றும் இருந்துவரும் நிலைபேறுடைய பொருள் என்னும் கொள்கையை யுடைய சமணராதல் இல்லை.

> **"மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்தத்**
> **தாவாத இன்பம் தலையாயது தன்னின்எய்தி...".**

எனத் திருத்தக்கதேவர் பாடுதற் கேற்ப 'உலகம் நித்தியம்' என்று துணிந்த சமண் சமயத்தவர் அல்லர். தொல்காப்பியர் காலத்திற் புத்தம் சமணம் போன்ற சமயங்கள் தோன்றப் பெறவில்லை என்பதே அறிஞர் துணிபு. இன்னோரன்ன செய்திகள் எங்ஙனமாயினும், "சிறந்தது பயிற்றல இறந்ததன் பயனே" என முடித்துரைத்தலால், தொல்காப்பியர் சமய வாழ்வின் சிறப்பும் இன்றியமையாமையும் பெரிதும் வலியுறுத்தியவராவர் என்பது மட்டும், எவரும் மறுக்கொணாது தோன்று.

**தமிழிலக்கணத்தின் சிறப்புகள்:**

தொல்காப்பியம் உலகிலேயே மிகப் பழைய இலக்கண நூல். எத்தனையோ மொழிகள் இன்றளவும் தமக்கெனத் திருந்திய இலக்கணம் அமையப் பெறுமற் கிடக்கின்றன. இன்றொன்று உலகம் முழுவதுமே பரவி அறிவுலகில் அரசோச்சி நிற்கும் அத்துணைப் பெருமை பெற்றுடைய ஆங்கிலமொழிக்குத் தானும் இன்னும் இலக்கண அமைப்பு விதிகள் நன்கினிது செம்மையுற வரையறுக்கப்படவில்லை. ஆங்கில மொழியின் இலக்கணம் பலவகைகளில் திருத்தப்பெறவேண்டியுள்ளது என்பதனை வற்புறுத்துதற்கே, அறிஞர் பெர்னார்ட்ஷா அவர்கள் 'பிக்மேலியன்' (Pygmalion, My Fair Lady) என்னும் நாடகம் எழுதினார். அறிஞர்கள் பலர் ஆங்கிலமொழியிலக்கணத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்டியுள்ளனர்.(3,4)

---

(3) "Most of the Englishmen and Americans are blissfully unconscious of the merci lessness of their language. They will admit, however, that neither its *spelling* nor its *syntax* is perfectly rational."

—*Rabindranath Tagore, Modern Review, 1931*

(4) "If an S and I and an O and U with an X at the end spell Su—And if an E and Y and an E spell I, pray what is a fellow to do? If an S and an I and a G and Hed spell Sighed—there is nothing much for a speller to do, but go and commit

$$\frac{\text{Sioux}}{\text{(Su)}} - \frac{\text{Eye}}{\text{(I)}} - \frac{\text{Sighed}}{\text{(cide)}}\text{"}$$

ஓரளவு திருந்திய இலக்கணம் பெற்றுள்ள தெனப்படும் வடமொழி தானும் எழுத்தும் சொல்லும் பிறவும் பற்றிய இலக்கணம் பெற்றுள்ளதே யன்றித் "**தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்**" எனப் பரிபாடல் பாராட்டும் பொருளிலக்கணத் தினைத் தமிழ்மொழி போலப் பெற்றிலது. *தொல்காப்பியர் எழுத்துக்களுக்கு **உயிர்** என்றும், **மெய்** என்றும் பெயர் அமைத்த தொன்றே பெரிதும் வியத்தற்குரியதாக உள்ளது (5,6). எழுத்துக்களின் பிறப்பியலை அவர் விளக்கியுள்ள முறை இஞ்ஞான்றை ஒலிநூல் (Phonetics) நுட்பங்களுக்குப் பெரிதும் இயைந்துள்ளது.

தமிழ்நெடுங் கணக்கினுள் அகர முதல் னகர இறுவாய்க்கிடக்கை முறையாதற்குக் காரணம் வியத்தகு முறையில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வறிவு நெறியினைத் தமிழினின்றே, பின்னாளில் மற்றைப சில மொழிகள் பெறுவனவாயின என்பதனை, அதனொடொத்த இனமொழிகளோடு ஒப்பிட்டுணரலாம். இன்னின்ன எழுத்துக்கள் மொழியின் முதலிடைகடைகளிற் பயின்றுவரும் எனவும், "**உச்சகாரம்** இருமொழிக்குரித்தே" "**உப்பகாரம்** ஒன்றென மொழிப" என்றாற் போலவும் ஆராய்ந்து அறுதியிட்டு வரையறுத்துக் கூறியிருத்தல், தொல்காப்பியத்தின் திட்ப நுட்பம் தெரிக்கும் சான்றாகும். **குற்றியலுகரம் ஆய்தம்** என்னும் தமிழ் ஒலிகளின் சிறப்பும் பெரிதும் போற்றற்பாலதாக விளங்குகின்றது.

இங்ஙனமே சொற்களுக்குத் திணைப் பகுப்பும் பாற்பகுப்பும் அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்த வகுத்தமை எத்துணையும் வழுத்துதற்குரிய தொன்றாம். அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தாத பிற மொழிகளின் பாற் பாகுபாட்டை நோக்கி யுணர வல்லார்க்கே இவ்வருமைப்பாடு வியப்பூட்டா நிற்கும்.

> "மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
> அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
> செய்வது இல்வழி நிகழுங் காலத்து
> மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையினால், பண்டைத் தமிழ் மக்களுக்கு நல்வினை தீவினைகளிலும், அவற்றின் விளைவாகிய சுவர்க்க நரகங்களிலும், இம்மை மறுமை ஆகிய பிறவிகளிலும் அழுந்திய நம்பிக்கை யிருந்தமை தெற்றெனத் தெளியப்படும்.

> "வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

என்னும் நூற்பாவானது, தன்பயனையூட்டுங்கால் வினையானது உயர்ந்தார் தாழ்ந்தார்-கற்றார் கல்லார்-செல்வர் வறியர் என வேற்றுமை பாராட்டாமல் தன் பயனை யூட்டுதற்கண் காலம் வருந்துணையும் காத்திருந்தேனும் ஊட்டி விடும் எனப் பிறிதொரு பொருளும் படுமாறு கூறியிருப்பது, தொல்காப்பியரின் மெய்யுணர்வு மேம்பாட்டைக் காட்டும்.

**தொல்காப்பிய நுட்பங்கள்:**

இனிப் பொருளிலக்கணத்தின் சிறப்புக்கு ஓர் எல்லையே இல்லை. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே வரையறைகள் விதித்த ஏனைய மொழிகளின் இலக்கணம் போலாது, மன்பதையின் வாழ்க்கைக்கே அப்பகுதி இலக்கணம் வகுத்து விடுகின்றது. மக்கள் வாழ்க்கையினை அகம் புறம் எனப் பகுத்த பாகுபாடு போற்றுதற்கு உரியது.

> "மக்கள் நுதலிய அகனைந் திணையும்
> சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"
> "மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே"

---

(5) "Tamil grammarians designates vowels by a beautiful metaphor, as *Uyir* or the life of a word; consonants as *mey* or the body; and the junction of a vowel and consonant as *Uyir mey*, or an animated body."
—*Dr. Caldwell.*

(6) "The classification of nouns in Tamil is decidedly more philosophical; for the difference between rational beings and beings of things which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes... The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation. —*Dr. Caldwell.*

"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்"

"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு
புணரார்"

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

"வழக்குஎனப் படுவது உயர்ந்தோர்
மேற்றே"

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறிது ஆகும்"

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே"

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி
மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனைமர பினவே"

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"

எனவும் பிறவாறும் வகுத்த விதிகள் எல்லாம் நினைத்தொறும் நினைத்தொறும் களிப்பூட்டுவனவாகும். **முதற்பொருள் உரிப்பொருள் கருப்பொருள்** எனத்திணைகளைப் பாகுபாடு செய்து விரித்தமை, இஞ்ஞான்றை எல்லாக் கலைகளின் விரிவுக்கும் இடம் தரூஉம் அடிப்படையாக அமைந்தொளிரும் சிறப்புடையதாய், அறிஞர்கட்கு ஆராப் பெருவிருந்தாவதெனலாம்.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

எனவரும் சூத்திரம் ஒன்றே, இந்நாளில் வளர்ந்துவரும் கலைத்துறைகள் பற்பலவற்றினையும் குறிக்க வல்ல கருத்திறல் (Nucleus) பெற்றதாகத் திகழ்கின்றது என அறிஞர்கள் பலர்வியந்து போற்றியுள்ளனர்.

**முடிவுரை:**

இத்தகைய ஒப்புயர்வற்ற இலக்கண நூலை இயற்றியுதவிய தமிழ்ப் பெருஞ் சான்றோர் தலைவராகிய **தொல்காப்பியர்** பெருந்தகையைத் தமிழராகிய நாம் அனைவரும், நன்றியுணர்வோடு பெரிதும்போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

—ஆசிரியர்.

## தொல்காப்பியச் சிறப்பு

(1) தொல்காப்பியம்என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த்துணரின்,—அல்கா
தறிதோ றறியாமை ஆழ்ந்தகன் றோங்கித்
தொடுவானம் போற்செல்லும் சூழ்ந்து!

(2) பழமை பெருமை நூற் பண்பனைத்தும் வாய்ந்து
விழுமியர்கள் எல்லாம் வியப்ப,—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விக நூ லாய்விளங்கும்
நந்தம் அருந் தொல்காப் பியம்!

(3) மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
ஒழிவில் இலக்கணமும் உண்டு—வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கண நூல்
ஒன்றேனும், இவ்வுலகத் தில்!

(4) வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம்

(5) பாணினியார் நூற்செறிவும், பண்பார் பதஞ்சலியார்,
காணினிய திட்பக் கருத்தியலும்,—சேணினிய
சீர் அரித்தாட் டில்சொற் றெளிவும், அளவையும்சால்
பேரெழிற்றும் தொல்காப் பியம்

(6) ஐந்தெனும்பல் லாயிரமாம் ஆண்டுகட்கு முன்னரே
செந்தமிழில் அன்றிச், சிறந்துமிகும் இந்தவகை
நாகரிகத் தெய்வநல நல்லறிவு நூல்களொன்றுண்
டாக நினைப்பவும்யார்க் காம்?

— ஆசிரியர்.

# விடை தெரியுமா?

1. விநாயகர் ஆகிய **'கணபதி'** எத்தனை வகை நிலைகளில் திருவுருவம் கொண்டு திகழ்வதாக நூல்கள் குறிப்பிடுகின்றன?

2. குரு லிங்கம் சங்கமம் என்னும் மூன்று வடிவங்களாகவும் முறையே சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் தலம் யாது? அங்கு அவர் இம் மூன்று நிலைகளிலும் விளங்குதலைத் தெளிவுறுத்துக.

3. **'உரோமசர்'** என்பவர் யார்? அவரைப் பற்றிய வரலாறு யாது?

4. **'சப்த மாதர்கள்'** என்போர் யார் யார்? அவர்கள் வழிபட்டனவாகத் திருமயிலாடுதுறையினைச் சூழ்ந்துள்ள தலங்கள் எவை எவை?

5. "ஒளிர்சிவ லோகம் கண்ட ஒருவன்தென் னாடு நீங்கித்
தளிர்செறி பொழிற்றன் பால்ஓர் தலத்தடைந் தகலான் ஆகிக்
குளிர்பணி அனைத்தும் செய்து கொள்ளவும் இன்பம் மேவி
மிளிர்தர மகிழ்ச்சி மேன்மேல் விளைத்தது சென்னி நாடு"

எனவரும் அம்பர்ப் புராணத் திருநாட்டுப் படலச் செய்யுளாற் குறிப்பிடப் பெறுபவர் யார்? விளக்குக.

6. பதினெண் சித்தர்களின் பெயர்களையும், அவர்கள் சமாதி கொண்டருளிய தலங்களின் பெயர்களையும் முறையே குறிப்பிடுக.

7. வைஷ்ணவ உலகில் **"அஷ்ட திக் கஜங்கள்"** எனப் புகழ் பெற்றவர்கள் யார் யார்?

8. பகவானுக்கு உரிய ஆறு குணங்கள் யாவை? திருவரங்கத்தில் அர்ச்சையாய் எழுந்தருளியுள்ள நம்பெருமாள்பால் அந்த ஆறு திருக்குணங்களும் அமைந்து காணப்படுமாற்றினைப் புலப்படுத்துக.

9. **"கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா"** என்னும் திருப்பாவைப் பாடலின் சிறந்த தொடருக்குக் கூறப்பெறும் நயவுரை யாது?

10. **பிள்ளை லோகாசார்யர்** என்பவர் யார்? அவர் அருளிச் செய்துள்ள நூல்கள் யாவை?

**[விடை: மறுபக்கம் காண்க]**

# விடை விளக்கம்

1 "கருதுவார் கருதும் உருவமாம் கங்கை கொண்ட சோளேச்சுரத் தானே" எனக் கருவூர்த் தேவரும், "நெஞ்சினல் நினைப்பான் யவன் அவன் ஆகும் நீள்கடல் வண்ணனே" என நம்மாழ்வாரும் அருளிச் செய்துள்ளபடி, இறைவன் தன் அடியார்களின் விருப்பத்திற்கு ஏற்பப் பலவேறு வடிவங்கள் கொண்டு காட்சி யளித்து அருள்புரிகின்முன். அம்முறையில் விநாயகப் பெருமான், தன் அடியவர் களுக்குப் பலவேறு வடிவங்களில் காட்சி யளித்து நலம் புரிந்தருளுதலை, நூல்கள் 32 வகைகளாகக் குறிப்பிட்டுள்ளன. அவைகள் முறையே வருமாறு:—

| | |
|---|---|
| 1. பால கணபதி | 17. ஏகாட்சர கணபதி |
| 2. தருண கணபதி | 18. வர கணபதி |
| 3. பக்த கணபதி | 19. திரியட்சர கணபதி |
| 4. வீர கணபதி | 20. ஹரித்ரா கணபதி |
| 5. சக்தி கணபதி | 21. ஏகதந்த கணபதி |
| 6. துவிஜ கணபதி | 22. சிருஷ்டி கணபதி |
| 7. சித்த கணபதி | 23. உத்தண்ட கணபதி |
| 8. உச்சிஷ்ட கணபதி | 24. ருணமோசன கணபதி |
| 9. விக்கின கணபதி | 25. துண்டி கணபதி |
| 10. க்ஷிப்ர கணபதி | 26. துவிமுக கணபதி |
| 11. ஏரம்ப கணபதி | 27. திரிமுக கணபதி |
| 12. லக்ஷ்மி கணபதி | 28. பஞ்சமுக கணபதி |
| 13. மகா கணபதி | 29. சிம்ஹ கணபதி |
| 14. விஜய கணபதி | 30. யோக கணபதி |
| 15. நிருத்த கணபதி | 31. துர்க்கை கணபதி |
| 16. ஊர்த்துவ கணபதி | 32. சங்கஷ்டஹர கணபதி |

2 குரு லிங்கம் சங்கமம் என்னும் மூன்று வடிவங்களாகவும் சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் தலம் **சீர்காழி.** இங்கே சிவபெருமான் குரு மூர்த்தமாகத் **தோணியப்பர்** என்றும், இலிங்க மூர்த்தமாகப் **பிரமபுரீசுவரர்** என்றும், சங்கம மூர்த்தமாகச் **சட்டைநாதர்** என்றும் பெயர் பெற்று விளங்குகின்முர்.

3 இவர் ஒரு முனிவர். இவர் இறைவனைத் தம் உடலோடு நெடுங்காலம் இருந்து வாழ்ந்து வழிபட்டு மகிழ்தல் வேண்டும் என விரும்பிக் கடுந்தவம் புரிந்தார். இறைவன் வெளிப்பட்டு, இவருக்கு மிக நீண்ட ஆயுளை வழங்கினுர். இவ்வுலகில் தேவர்களை யெல்லாம் விட ஆயுள் மிக்கவர் பிரமதேவர். அத்தகைய பிரமதேவர் ஒருவர் இறந்தால், இம்முனிவரின் உடலில் இருந்து ஓர் உரோமம் இற்றுக் கீழே விழும். இங்ஙனம் பிரமதேவர்கள் எண்ணத் தொலையாத பலர் இறந்து, இனி இவர் உடலில் ஓர் உரோமமும் இல்லை என்னும் நிலை வருமளவும், நெடுங்காலம் நிலவுலகில் வாழ்ந்திருந்து இறைவனை வழிபடும் பேறு பெற்றவர் இவர் என்பது வரலாறு. உடம்பு முழுவதும் அடர்ந்து வளர்ந்த உரோமம் உடையவராக விளங்கி யதனுல் இவருக்கு **உரோமசர்** எனப் பெயர் அமைந்தது. இவரைத் திருஞான சம்பந்தர் "முழுதுடலில் எழும் மயிர்கள் தழுவும் முனி" என்று குறிப்பிடுகின்முர்.

ஒழுகலரிது அழிகலியில் உழியுலகு
பழிபெருகு வழியை நினையா
முழுதுடலில் எழும்மயிர்கள் தழுவுமுனி
குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை
கழுவும்உரை கழுமலநகர்ப்
பழுதிலிறை எழுதுமொழி தமிழ்விரகன்
வழிமொழிகள் மொழி தகையவே"

எனவரும் திருக்கழுமலத் தேவாரம் இம்முனிவரின் வரலாற்றை இனிதுணர்த்துதல் காணலாம். காழச் சீராம விண்ணகரத் திருப்பதிகத்தில், திருமங்கையாழ்வாரும் இம் முனிவரின் வரலாற்றைப் பின்வருமாறு குறிப்பிட்டருளியுள்ளார்.

நான்முகன்நாள் மிகைத்தருக்கை இருக்கு வாய்மை
நலமிகுசீர் உரோமசனால் நவிற்றி, நக்கன்
ஊன்முகமார் தலையோட்டூண் ஒழித்த எந்தை
ஒளிமலர்ச் சேவடி அணைவீர்! உழுசேய் ஓடச்
சூன்முகமார் வளையளைவாய் உகுத்த முத்தைத்
தோல்குருகு சினை என்னச் சூழ்ந்து இயங்க,
தேன்முகமார் கமலவயல் சேல்பாய் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே

என்பது பெரிய திருமொழிப் பாடல். நீண்ட வாழ்நாள் உடையவர்களில் நமக்கு மேற்பட்டார் எவரும் இலை என்று மிகுந்த தருக்குக் கொண்டிருந்த பிரமதேவரை, இறைவன் உரோமச முனிவரால் செருக்கு அடங்கச் செய்தனன் என்பது இப்பாடலின் கருத்து.

4. பிராமி மாகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி என்னும் எழுவரும் சப்த மாதர்கள் எனப்படுவர், (1) பிராமி பூசித்த தலம் திருத்தான்றோன்றீசம் என்னும் சுயம்புநாதர் கோயில் (2) மகேசுவரி வழிபட்டது கருணமபட்டை (3) கௌமாரி போற்றியது கஞ்சாறு என்னும் ஆநந்த தாண்டவபுரம் (4) வைஷ்ணவி வணங்கியது பசுபதீசுவரம் (5) வராகி இறைஞ்சியது சக்திபுரி ஆகிய கழுக்காணி முட்டம் (6) சாமுண்டி தரிசித்தது வள்ளலார் கோயில் (7) இந்திராணி வழிபட்டது தருமபுரம்.

இச்செய்தியை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய திருமயிலாடுதுறைத் தலபுராணப் பாடல்கள் உணர்த்துதல் காணலாம்;—

பேசவாம்புகழ்ப் பிராமிஎன் றுரைப்பவள் தான்தோன்
றீசநாதனை இமையவர் வாழநஞ் சுண்டு
நாசம் இல்லியை நலத்தகு பூசனை ஆற்றித்
தேசு அமைந்தபல் வரத்தொடு சிறப்பெலாம் பெற்றாள் (1)

சிரத்து மாமதி சூடிய தேவனைக் கருணா
புரத்து நாதனைப் புண்ணிய மூர்த்தியைப் புகழ்சால்
உரத்து மேம்படும் மயேச்சுரி பூசனை புரிந்து
வரத்து மேதகு சிறப்பெலாம் பெற்றனள் வாழ்ந்தாள் (2)

ஆறு சூடியை அற்புதக் கூத்தனை அவிர்கஞ்
சாறு மேவிய சங்கரன் தனைக்கவு மாரி
ஊறும் அன்பினில் ஒளிகெழு பூசனை உஞற்றி
ஏறு பற்பல வரங்களும் இன்புறப் பெற்றாள், (3)

பரவு புண்ணிய நாதனைப் பசுபதீச் சரத்து
விரவும் ஆதியை அடியருக் கெளியவே தியனைப்
புரவு பூண்டொளிர் வயிணவி பூசனை புரிந்து
கரவு தீர்தரு வரமெலாம் பெற்றுளம் களித்தாள். (4)

கரியின் தோல்திரு மேனியிற் கவினுறப் போர்த்தி
அரியின் கண்அடி அணிதரும் அண்ணலைச் சத்தி
புரியின் மேவிய பொருளினை வாராகிபூ சித்தாள்
தெரியின் மேம்படு வரமெலாம் சிறப்புறப் பெற்றாள். (5)

கரம்வி ராயவச் சிரக்கவின் பெற்றஇந் திராணி
தரம்வி ராயபல் லுயிர்க்கும்நன் கருள்திருத் தரும
புரம்வி ராயஅற் புதன் அடிப் பூசனை புரிந்தாள்
பரம்வி ராயபல் வரங்களும் பண்புறப் பெற்றாள். (6)

பார மேருவிற் பரமனைப் பரவும்உத் தரமா
யூர நாதனை உம்பர்கள் தம்பெரு மானைத்
தீர மேதகு சாமுண்டி பூசனை செய்து
வார மேயபல் வரங்களும் பெற்றுளம் மகிழ்ந்தாள் (7)

— மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

5. இச் செய்யுள் சோழ நாட்டின் பெருமையை விளக்குவது. பாண்டிய நாட்டைத் தனக்குரிய சிறப்பு நாடாகக் கொண்ட வரகுணமன்னன், சோழ நாட்டிற்குப் போந்து, திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பிரமகத்தி என்னும் கொடும் பெருந் தீவினை நீங்கப் பெற்றான்; அங்கேயே தங்கி வாழ்ந்து, மருதவாணப் பெருமானுக்குப் பற்பல திருப்பணிகள் புரிந்து மகிழ்ந்தான்; இறைவனால் சிவலோகம் காட்டப்பெற்றான்; அதன் பின்னரும் கூட, அவன் விரும்பிப் போற்றி யுவந்த சிறப்புடையது சோழநாடு என்பது இப்பாடலின் கருத்து. 'சிவலோகம் கண்ட ஒருவன்' என்றது **வரகுணபாண்டியனை**. 'தன்பால் ஓர் தலம்' என்றது **திருவிடை மருதூரை**. 'பணி அனைத்தும் செய்து' என்றது. வரகுண பாண்டியன் செய்த அருஞ் செயல்களாகப் பட்டினத்தடிகள் பதினொன்றாம் திருமுறையில் 'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யில் (28, வரிகள் 34 முதல் 55 வரையில்) பாராட்டிக் கூறியுள்ள **பணிகளை**.

இப்பாடலில் 'ஒருவன் **தென்னாடு** நீங்கி' என்பது '**தன்னாடு**' என்று இருந்திருத்தல் வேண்டும். மாற்றான் ஆகிய பாண்டிய மன்னனே மிகவும் விரும்பித் தங்கியுறைந்த மாட்சிமை யுடையது சோழ நாடு என்பது கருத்து. சிவலோகம் கண்ட பின்னரும் விரும்பிப் போற்றி யுவந்தனன் என்றதனால், சோழ நாடு சிவலோகம் போன்றும், அதனிற் சிறந்தும் விளங்குவது எனக் குறிப்பிட்டபடி.

" இதில் கூறப்பெறும் வரலாறு மாணிக்கவாசகரைக் குறிக்குமா என்பது ஆராய்தற்குரியது... வேறு பொருளுளதேல் காண்க "

என அண்மையிற் போந்த திருஅம்பர்ப் புராணப் பதிப்பின் குறிப்புரையைத் தழுவி அதற்குத் துணையாகவே, இவ்விளக்கம் தரப்பட்டது.

6 சித்தர்கள் பதினெண்மர் என்றும், இருபத்தொருவர் என்றும் கூறப் பெறுவர். அவர்களின் பெயர்களும், அவர்கள் சமாதி கொண்டருளியுள்ள தலங்களின் பெயர்களும் முறையே பின்வருமாறு :—

| சித்தர்கள். | | தலங்கள். |
|---|---|---|
| 1. திருமூலர் | — | சிதம்பரம் |
| 2. நந்தி | — | காசி |
| 3. கொங்கணர் | — | திருப்பதி |
| 4. நந்திதேவர் | — | சீர்காழி |
| 5. தன்வந்திரி | — | வைத்தீசுவரன் கோயில் |
| 6. கமலமுனி | — | திருவாரூர் |
| 7. வால்மீகி | — | எட்டுகுடி |
| 8. சட்டைமுனி | — | ஸ்ரீரங்கம் |
| 9. கருவூர்த்தேவர் | — | கரூவூர் |
| 10. போகர் | — | பழனி |
| 11. சுந்தரானந்தர் | — | மதுரை |
| 12. மச்சமுனி | — | திருப்பரங்குன்றம் |
| 13. இராமதேவர் | — | அழகர்மலை |
| 14. கும்பமுனி | — | திருவனந்தபுரம் |
| 15. கோரக்கர் | — | ஸ்ரீ சைலம் |
| 16. குதம்பைச் சித்தர் | — | திருக்கழுக்குன்றம் |
| 17. பதஞ்சலி | — | இராமேசுவரம் |
| 18. இடைக்காடர் | — | திருவண்ணாமலை |
| 19. அகப்பேய்ச்சித்தர் | — | விருத்தாசலம் |
| 20. கவரிமான் முனிவர் | — | திருக்காளத்தி |
| 21. பாம்பாட்டிச் சித்தர் | — | திருக்கடவூர் |

7 மணவாள மாமுனிகளின் திருவடிகளிலே ஈடுபட்டு ஒழுகியுய்ந்தவர்கள் மிகப்பலர். என்ருலும் அவர்களுள்ளே மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் எண்மர் ஆவர்.

1. வானமாமலை ஜீயர்
2. பட்டர்பிரான் ஜீயர்
3. திருவேங்கட ராமாநுஜ ஜீயர்
4. கோயில் அண்ணன்
5. பிரதிவாதிபயங்கரம் அண்ணன்
6. எறும்பியப்பா
7. அப்பிள்ளை
8. அப்பிள்ளார்.

என்னும் எட்டுப் பேரையும், "அஷ்ட திக் கஜங்கள்" என்று பெரியோர்கள் சிறப்பித்துப் பாராட்டுவர்.

8 பகவானுக்குரிய பெருஞ் சிறப்பியற் குணங்கள் ஆறு. அவை முறையே வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி என்பன வாகும்.

(அ) **வாத்சல்யம்:** தான் ஈன்ற கன்றின் அழுக்கை இனிமையாக உண்டு அதற்குத் தன் பாலைக் கொடுத்து வளர்த்து, அதன்பால் தீங்கு புரிவோரை எதிர்த்துக் காக்கும் பசுவைப் போன்று, தன்னைப் புகலடைந்த அடியவனின் குற்றங்களைக் குணமாகக் கொண்டு, தன் சிறந்த குணங்களால் அவனை உய்யச் செய்து அவனுக்குப் பிறரால் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் காத்தருளும் இறைவனின் எல்லையற்ற பரிவுத் தன்மை, வத்ஸம்—கன்று. வாத்ஸல்யம்—கன்றின்பால் பசுவுக்குள்ள பரிவு போன்ற பெருங்கருணைத் திறம்,

(ஆ) **சுவாமித்துவம்:** தன்னைச் சிறிதும் கருதாமல் புறக்கணித்துவிட்டு ஓர் அடியவன் உலகியல் நுகர்ச்சிகளையே தேடி அலைந்துழன்று திரியினும், தன் உடைமையான அவனைத் தான் விடாமல் பின்தொடர்ந்து சென்று, அவன் நெஞ்சினுள் மறைந்துறைந்து நின்று நலம் செய்யும் பண்பு. சுவம்—உடைமை பொருள். சுவாமி—உடையவன், பொருளுக்குரிய தலைவன்.

(இ) **சௌசீல்யம்:** தான் உயர்வற உயர்நலம் உடையவனே யாயினும், எத்துணை இழிந்தவர்களோடும் எத்தகைய வேறுபாடும் இன்றிப் புரையறக் கலந்து பழகி உறவாடும் தன்மை. சு—நல்ல. சீலம்—பண்பாடு.

(ஈ) **சௌலப்பியம்:** இறைவன் தன்னுடைய அழகிய திருவுருவை உயிர்களின் கண்களுக்கும் புலனாகுமாறு செய்தருளும் எளிமை யியல்பு. சுலபம்—எளிமை

(உ) **ஞானம்:** உயிர்கள் தீவினைகளிற் செறிந்து கிடத்தலையும், அவைகள் வீடு பேற்றை அடைதற்கேற்ற தகுதியினை எய்தும் நிலைகளையும் பிறவற்றையும் எல்லாம் ஒருங்கே யுணரவல்ல பெருந்திறம்.

(ஊ) **சக்தி:** உயிர்களின் குற்றங்களைக் களைந்து குணங்களை வளர்த்து ஆட்கொண்டு காத்தருளுதற்குரிய பேராற்றல்.

ஈசுவரனுக்குள்ள இந்த ஆறு பெருங்குணங்களும், திருவரங்கத்தில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள்பால் அமைந்திருத்தலை, நாம் தெளியக் காணலாம்.

(1) பெருமானின் இடக்கை தன் திருவடிகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது, உயிர்களின் குற்றங்களையே குணமாகக் கொண்டு யாவரையும் ஏற்றருளும் **வாத்சல்யத்தைப்** புலப்படுத்துகின்றது.

2) முகத்தில் காணப்படும் புன்முறுவல் எத்துணை இழிந்தாரோடும் கலந்து உறவாடிப் பழகும் **சௌலப்பியத்தைப்** புலப்படுத்துகின்றது.

(3) பகவானின் தலையில் ஒளிரும் திருமுடி, அவனே எல்லோரையும்விட ஞானம், சக்தி ஆகியவைகளினால் உயர்ந்த தலைவன் என்னும் **சுவாமித்துவத்தை** உணர்த்துகின்றது.

(4) எல்லோருக்கும் கட்புலனாகுர் வண்ணம் தாமரை மலரில் மெல்லென ஊன்றி நிற்கும் இறைவனது திருவடிகளின் நிலை **சௌசீல்யத்தைப்** புலப்படுத்துவது.

9. பகவான் தன்னோடு கூடாதார்கள் ஆகிய பரசுராமன் இராவணன் துரியோதனன் போன்ற பகைவர்களை அடக்கி வெற்றி கொள்வான். ஆனால் தன்னோடு கூடுவோர்கள் ஆகிய சுக்கிரீவன் விபீஷணன் அருச்சுனன் போன்ற நண்பர்களுக்குத் தான் பணிந்து தோல்வியை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு வெற்றியை அளித்துப் பெருமைப் படுத்துவான் என்பது, இவ்வரியின் சிறந்த பொருள். "**கூடாரை வெல்லும்**" என்றதனால், **கூடினார்க்குத் தோற்கும்** என்பது அருத்தாபத்தியாற் பெறப்படும்.

" தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும்; பகைஎளிற்
கூற்றும் வரினும் தொலையான். தன் நாட்டார்க்குத்
தோற்றலை நாணுதான் குன்று "

—குறிஞ்சிக் கலி

எனவரும் செய்யுட்பகுதி, இங்கு நாம் இயைபுடைமை பற்றிச் சிந்தித்து இன்புறுதற்குரியது.

10. **பிள்ளை லோகாசார்யர்** என்பவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரர். இவர்தம் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆவர். இருவரும் நைட்டிகப் பிரமசாரிகளாக வாழ்ந்தவர்கள். வடக்குத் திருவீதிப் பிள்ளை அவர்கள், தம்முடைய ஆசார்யர் ஆகிய **நம்பிள்ளையின்** திருநாமத்தையே இவர்க்கு வைத்து வழங்கினர். நம்பிள்ளைக்கு 'லோகாசார்யர்' என்பது சிறப்புற வழங்கிய பெயர். ஆதலின் அவரோடு இவரிடை வேறுபாடு தெரிவதற்காக இவருக்குப் '**பிள்ளை** லோகாசார்யர்' எனப் பெயர் வழங்குவதாயிற்று.

" துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர், தம்உகப்பால்
உன்னஉல காரியனா? என்றுரைக்கப்—பின்னை
உலகா ரியன்எனும்பேர் நம்பிள்ளைக்கு ஓங்கி
விலகாமல் நின்றதென் றும் மேல்''

''பின்னை வடக்குத் திருவீதிப் பிள்ளை அன்பால்
அன்ன திரு நாமத்தை ஆதரித்து—மன்னுபுகழ்
மைந்தர்க்குச் சாத்துகையால் வந்து பரந்ததெங்கும்
இந்தத் திருநாமம் இங்கு "

—உபதேச ரத்தினமாலை.

பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்துள்ள நூல்கள் பதினெட்டு. அவற்றை **அஷ்டாதச ரகசியம்**' என்று பெரியோர்கள் குறிப்பிடுவர். அவைகள் வருமாறு:—

1. ஸ்ரீவசந பூஷணம்
2. தத்துவத் திரயம்
3. அர்த்த பஞ்சகம்
4. அர்ச்சை
5. பிரமேய சேகரம்
6. பிரபந்ந பரித்திராணம்
7. சார சங்கிரகம்
8. சம்சார சாம்ராஜ்யம்
9. நவரத்ந மாலை
10. நவவித சம்பந்தம்
11. யாத்ருச்சிகப்படி
12. பரந்தபடி
13. ச்ரிய: பதிப்படி
14. தத்துவ சேகரம்
15. தனித் துவயம்
16. தனிச் சரமம்
17. தனிப் பிரணவம்
18. முமுட்சுப் படி.

—ஆசிரியர்.

# சிவஞான போதத் தெளிவுரை

## பொது அதிகாரம்

### இலக்கணவியல் (பசு இலக்கணம்)

**அந்தக் கரணம் அவற்றின் ஒன் றன்று, அவை**
**சந்தித்தது ; ஆன்மாச் சகசமலத் துணராது ;**
**அமைச்சரசு ஏய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே**

(பொருள்)

ஆன்மா - உயிரானது
அந்தக்கரணம் அவற்றின் - மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கு அகக் கருவிகளுள்,
ஒன்று அன்று - ஒன்று ஆகாது. (ஆயினும்)
சகச மலத்து - ஆணவமலத்தினுல்,
உணராது - (தனக்கு) உணர்வு இல்லாமையினுல்,
அமைச்சு அரசு ஏய்ப்ப - அமைச்சரோடு கூடிய அரசன்போல,
அவை - அவ்வந்தக்கரணங்களோடு,
சந்தித்தது நின்று - கூடியதாக நிற்றலான்,
அஞ்சு அவத்தைத்து - நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து அவத்தைகளை யுடையதாகும்,

'ஒன்றன்று' என்புழி 'ஆயினும்' என்பது வருவிக்க,
சகசமலம் – ஆணவமலம்; நெல்லுக்கு உமிபோல உயிருக்கு உடனுகத் தோன்றியமலம் என்பது பொருள்.

சக + ஜம் - உடனுகத் தோன்றியது,
உணராது - உணராமையினுல் (காரணப்பொருள்).
சந்தித்தது - கூடியது
சந்தித்(த)து நின்று - சந்தித்து நின்று; வினைஎச்சமுற்று.
"சந்தித்து நின்று அஞ்சு அவத்தைத்து" என முடியும்.

ஐந்தவத்தைகளை முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் எனவும் கூறுவர். உயிர் அரசன் போல்வது; அந்தக் கரணங்கள் அமைச்சர்கள் போல்வன.

ஆன்மாவுக்கு இலக்கணம், அந்தக் கரணங்களோடு கூடி நின்று ஐந்து அவத்தைப்படுதல். இஃது உயிர்க்குத் தடத்த லக்கணம் எனப்படும் பொது இயல்பு.

ஒரு பொருளின் உண்மையை எடுத்துக் காட்டி விளக்க வேண்டுமாயின் பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டாலும் எடுத்துக்காட்ட வேண்டுமாதலால், "பிரமாண இயல்' எனப்படும் முதல் மூன்று சூத்திரங்களால், பதி பாசம் பசு ஆகிய முப்பொருள்களின் உண்மையைப் பிரமாணத்தால் முறையே எடுத்துக்காட்டினர்.

இங்கு, "இலக்கண இயல்" எனப்படும் பின் மூன்று சூத்திரங்களில் எதிர் நிரல்நிறையாக வைத்து, முப்பொருள்களின் உண்மையை இலக்கணத்தால் எடுத்துக் காட்டுகின்றார். 'மாட்டேறு' என்னும் இலக்கண முறையால், இச்சூத்திரம் மூன்றும் சூத்திரத்தோடு தொடர்புடையதாய், ஆன்ம (பசு) இலக்கணம் உணர்த்திற்று.(4)

## (பாச இலக்கணம்)

**விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு**
**அளந்தறிந் தறியா ; ஆங்கு அவை போலத்**
**தாம்தம் உணர்வின் தமியருள்,**
**காந்தங் கண்ட பசாசத் தவையே.**

பொருள்)

விளம்பிய - முற்கூறிய
உள்ளத்து - உயிரால்
மெய்வாய் கண்மூக்கு - மெய் வாய் கண்மூக்கு (செவி) என்பன,
அளந்து அறிந்து(ம்) - தத்தம் விடயங்களை இது இன்னதென்று அளவிட்டு அறிந்தும்,
அறியா - அங்ஙனம் அறியும் தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் உயிரையும் அறியமாட்டா.
ஆங்குஅவைபோல - அங்கே அவ் வைம்பொறிகளைப் போல,
தாம் - உயிர்கள்
தம் உணர்வின் தமி - தமது உணர்விற்கு முதலாகிய இறைவனின்,
அருள் - திரோதான சத்தியால்
அளந்து அறிநுந்தும் - வினைப்பயன்களை அறிந்து நுகர்ந்தும்,
(அறியா) - தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறிய மாட்டா :
காந்தம் கண்ட பசாசத்தவை - காந்தத்தை எதிர்ப்பட்ட இரும்பு போலத் தொழிற்படும்.

காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் முன்னிலையளவில் தொழிற்படுதல் போல, (கருவிகளான் அன்றி நினைப்பளவாற் செலுத்தி நிற்கும்) இறைவனது முன்னிலையில், உயிர்கள் ஐந்தவத்தைகளினின்று வினைப்பயன்களை அறிந்து நுகரும்.

இரும்பானது காந்தத்தை எதிர்ப்பட்ட அளவில் தொழிற்படினும், காந்தமானது ஒரு செயலும் அற்றுத் தன்னியல்பில் நிற்கும். அதுபோல, உயிர்கள் இறைவனால் இயக்கப்படினும், இறைவன் அசைவற்று நிற்பன். (ஆகலான் உயிர்களைத் தொழிற் படுத்துதல் பற்றி இறைவன் திரிபு எய்துதல் இல்லை என்பது குறிப்பெச்சம்)

**'செவி'** என்பது சொல்லெச்சம்
**அறிந்தறியா** - அறிந்தும் அறியா.
**பசாசம்** - இரும்பு
**தமி** - முதல்வன்; கடவுள்
**அருள்**-திரோதானசத்தி
இச்சூத்திரம் எடுத்துக்காட்டுவமையணி.

பொருள்களை அறிதற்கண் முதல்வன் உடன்நின்று செலுத்துவனுயின், பொருள்களோடு ஒப்ப முதல்வனையும் உயிர்கள் அறிதல் வேண்டுமே? என்னும் ஐயம் நீக்குதற்கு, 'அளந்தறிந்து' என்ருெழியாது 'அறியாது' என்றும் கூறினர்.

இது, முதல்வனது திருவருள் உயிர்களின் அறிவிற் கலந்து மறைந்து நின்று உபகரிக்கும் உபகாரத்தைக் கூறுகிறது. மறைந்து நின்று உபகரிக்கும் முதல்வனது சத்தி, மறைப்புச் **சத்தி** அல்லது **திரோதானசத்தி** எனப்படும். திரோதானசத்தியால் தான், மாயை கன்மம் என்னும் பாசங்கள் காரியப்படும்.

திரோதான சத்தியின் இலக்கணம் கூறியமையால், இவ்வைந்தாம் சூத்திரம் பாசத்தின் இலக்கணம் கூறியதாகக் கொள்ளப்படும். (5)

## (பதி இலக்கணம்)

**உணர்உரு அசத்து எனின், உணராது இன்மையின்**
**இருதிறன் அல்லது சிவசத்தாம் என,**
**இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே,**

(பொருள்)

உணர் உரு எனின் - கடவுள் ஆகிய முதற்பொருள் நம் கருவி கரணங்களால் உணரப்படும் பொருள் என்றால்
அசத்து - அழிபொருளாகிய அசத்து ஆகும்;
உணராது எனின் - (எவ்வாற்ருலும்) உணரப்படாத பொருள் என்ருல்,
இன்மையின் - (என்றும் எங்கும்) இல்லாத சூனியப் பொருளாகிவிடும்; ஆதலின்,
இருதிறன் அல்லது - இவ்விரண்டு கூறுபாடும் அன்றி,
இரண்டு வகையின் - (பாச ஞான பசு ஞானங்களான்) ஒருவகையில் அறியப் படாமையும், (சிவஞானம் ஒன்ருனே) ஒரு வகையில் அறியப்படுதலும் ஆகிய இரண்டு வகையானும்,
சிவசத்து ஆம் என - சித்துச்சத்து ஆகியபொருள் என்று,
மன்னுலகு - மெய்யுணர்வில் நிலைபெற்றுயர்ந்தோர்,
இசைக்கும் - கூறுவார்கள்.

**'உலகு'** என்பது திருவருளே கண்ணுகக் கொண்டு இறைவனைக் கண்டு இன்புற்று நிற்கும்உயர்ந்தோரைக்குறிக்கும். **சத்து** - நிலைபேறுடைய உள்பொருள் **அசத்து** - நிலைமாறிச் செல்லும் அழிபொருள். **சிவசத்து** - சித்துச் சத்து; அறிவாகிய உள்பொருள்.

இறைவன் பாச ஞான பசுஞானங்களான் அறிப்படான். சிவஞானம் ஒன்றால் மட்டுமே அறியப்படுவான். இறைவன் பசுஞான பாச ஞானங்களால் அறியப் படாமையிற் **சிவம்** ஆதலும், பதிஞானம் ஆகிய சிவஞானம் கொண்டு அறியப்படுதலாற் **சத்து** ஆதலும் உணர்த்துதற்குச் **'சிவசத்து'** என்றார். இவ்வாற்றாற் சித்தாதலும் சத்தாதலும் உடையவனாய் நிற்றல் முதல்வனுக்கு இலக்கணம் எனப் பதிப் பொருள் இலக்கணம் உணர்த்தியவாறு. (6)

## சிறப்பு அதிகாரம்

## சாதன இயல்: ஆன்மாவின் சிறப்பிலக்கணம்

## (சாதகன் இயல்பு)

**யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்**
**சத்தே யறியாது; அசத்து இலது அறியாது;**
**இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.**

(இ - ள்) சத்து எதிர் - சத்தாகிய சிவத்தின்முன்,
யாவையும் - (அசத்தாகிய உலகப் பொருள்கள்) எல்லாம்,
சூனியம் - (விளங்கித் தோன்றாத) பாழேயாகும்.
ஆகலின் – அதனால்,
சத்து அறியாது - சத்தாகிய சிவம் உலகத்தை அறிந்து அனுபவியாது;
அசத்து - அசத்தாகிய உலகப் பொருள்கள்,
இலது ஆகலின் - அறிவில்லாதவை ஆதலால்,
அறியா - சிவத்தை யறிந்து அனுபவிக்க மாட்டா,
இரண்டுஅலா ஆன்மா - சத்தும் அசத்தும் ஆகிய இரண்டும் அல்லாமல் 'சதசத்து' என உள்ள உயிரானது,
இருதிறன் - சத்தாகிய சிவம், அசத்தாகிய உலகம் ஆகிய இரண்டையும்,
அறிவு உளது - அறியுந்தன்மை யுடையது.

சத்தோடியைந்து சத்தாகியும், அசத்தோடு கூடி அசத்தாகியும் சார்ந்ததன் வண்ணமாய் நின்று, சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகம் என்னும் இரண்டினையும் அறிந்து வரும் தன்மையுடையதாக இருப்பதால், ஆன்மாவைச் **'சதசத்து'** என்று சான்றோர் கூறுவராயினர், இதனையே, "சத்து அசத்து அறிவது ஆன்மா; தான் சத்துமன்று அசத்துமன்று; நித்தமாய்ச் சதசத்து ஆகி நின்றிடும் இரண்டின்பாலும்" என்று அருணந்தி சிவனாரும், "அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையாற் சதசத்து ஆமே" என்று உமாபதி சிவனாரும், விளக்கினர்.

" இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா " என்றதனால், ஆன்மாவின் சிறப்பிலக்கணம் கூறப்பெற்றது. **'இருதிறன் அறிவு உளது'** என்னும் இத்தொடரானது 'இருதிறனையும் அறியும் அறிவுளது' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும்; 'இருதிறனால் விளங்கிய அறிவுளது' என மூன்றாம் வேற்றுமைத் தொகையாகவும்; இருதிறனிலும் உள்ள அறிவுளது என ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும் பொருள்படும். (7)

## ஞானத்தினை உணரும் முறை

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்உணர்த்தவிட்டு,**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.**

(பொருள்)

தம்முதல் - (தனக்குள் நின்று இதுவரையும் அறிவித்து வந்த) பரம்பொருள்

தவத்தினில் - (உயிரானது தான்முன்னே செய்து வைத்த) புண்ணிய விசேடத்தால்,

குருவுமாய் – குருவடிவாகவும் எழுந்தருளி வந்து (சிவதீக்கை செய்து),

ஐம்புலவேடரின் வளர்ந்து - (அரசகுமாரன் ஆகிய நீ) ஐம்பொறிகள் ஆகிய வேடர்களுடன் சேர்ந்து பழகி வளர்ந்ததனால்,

அயர்ந்தனை - (அரசன் மகனென்னும் நின்பெருந்தகைமையை) அறியாமல் மயங்கித் துன்புற்றாய்,

என உணர்த்த - என்று அறிவிக்க,

விட்டு - (அவ்வளவிலேயே) ஐம்பொறிகளை விட்டு நீங்கி,

அன்னியம் இன்மையின் - முதல்வனுக்கு வேறாகிய பொருளாக இல்லாமையினால் (பிரிப்பின்றி நிற்கும் தன்மையில் நிலைபெற்று),

அரன்கழல் செலும் - அம்முதல்வனது திருவடிகளை அணைந்து நிற்கும்.

இச் சூத்திரம் ஏகதேச உருவகம். சிவஞான சித்தியாரின்கண் ''மன்னவன்றன் மகன் வேடர் இடத்தே தங்கி...'' என வரும் பாடலில் இதனையே முற்றுருவகமாக விரித்தோதி, அருணந்தி சிவம் அழகுற விளக்கியுள்ளார்.

இச்சூத்திரத்தால், உத்தமகுணமுடைய ஆன்மாக்களுக்கு இறைவன் மானுடச் சட்டை தாங்கி வந்து குருவாய் நின்று, அவை புலன்களின் வழிமயங்கி நின்ற தன்மையினையும், அவை சிவானந்தப் பெருஞ் செல்வந் துய்த்தற்குரிய சித்துப் பொருள் என்பதனையும் உணர்த்தியருள்வான் என்றும், அவ்விதம் உணர்த்திய வழி ஆன்மாக்கள் உலக முகப்படாமல் நீங்கி ஆண்டவன் திருவடியை அணையும் என்றும் கூறப்பட்டது. திருவருள் பெறுவதற்குக் குருவருள் மிகவும் இன்றியமையாத தொன்று என்பது, இந்நூற்பாவினால் உணர்த்தப் பெற்றது. (8)

## ஆன்மசுத்தி (சாதிக்கும் முறை)

**ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;**
**உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்**
**தண்நிழல்ஆம் பதி; விதி எண்ணும் அஞ்செழுத்தே.**

(பொருள்)

ஊனக்கண் - குறைந்த அறிவாகிய பசு அறிவினாலும்,
பாசம் - பாச அறிவினாலும்,
உணராப் பதியை – உணரப்படாத முதல்வனை,
ஞானக் கண்ணினில் - அவனது திருவடிஞானம் என்னும் அறிவினால்,
சிந்தை- உன் உள்ளத்தினிடத்தே,
நாடி - ஆராய்ந்து அறிவாயாக!
உராத்துனைத் தேர்த்து என - பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த் தேர்போன்று கழியும் இயல்பிற்று என்று அறிந்து,
பாசம் - (நிலம்முதல் நாதம் முடிவாகச் சொல்லப் பெறும்) பாசக் கூட்டத்தை
ஒருவ - நீங்குதலால்,
பதி – பதி ஞானமானது,
தண்நிழல் ஆம் – (பிறவித்துன்பமாகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய், வெளிப்பட்டு விளங்கும்.

(அப் பதிஞானக் காட்சி இடையறாதுநிகழ்ந்து வருதற் பொருட்டு)

அஞ்செழுத்து - திருவைந்தெழுத்தானது.
விதி எண்ணும் - விதிப்படி அறிந்து கணிக்கப்படும்,

ஊனம் - குறைவு
கண் - அறிவு

ஊனக்கண் -குறைந்த அறிவு ஆகிய பசு (உயிர்) அறிவு
பாசம் - பாச அறிவு
நாடி – நாடுக; ஆராய்ந்தறிக; இகர ஈற்று முன்னிலை ஏவல்
உராத் துனைத்தேர் - ஒருவனால் ஊரப்படாதர் வேகத்தையுடைதே; பேய்த்தேர் ((Mirage))
உரா – உராவு, உராவுதல்; முதல்நிலைத் தொழிற்பெயர்
உராவுதல் - பரந்து திரிதல்
துனை - வேகம்
உராத்துனை - பரந்து திரிதற்கண் மிக்க வேகம்; ஏழாம் வேற்றுமைத் தொகை.
எண்ணும் - அறிவாற் கணிக்கப்படும்; 'எண்ணுங்கள்' என ஏவல் வினையாகவும் பொருள் கொள்ளலாம்.

திருவைந்தெழுத்து மந்திரத்தில், சி சிவத்தினையும், வ அருளையும், ய உயிரையும், ந திரோதானசத்தி என்னும் மறைப்பு ஆற்றலையும், ம ஆணவம் முதலிய மலங்களையும் குறித்கும் என்பர்.

தம் முதல் குருவுமாகப் போந்து உணர்த்திய திருவைந் தெழுத்தினைச் சிந்தனை செய்துணர்ந்து கணிக்கும் முறையினால், ஐம்புல வேடர்களோடு கலந்து பழகி வளர்ந்த குற்றம் நீங்கி, உயிர் தன்னைத் தூய்மை செய்து கொள்ளும் நெறியினை யுணர்த்துவதனால், இச் சூத்திரம் ஆன்மசுத்தியினை உணர்த்திற்று. (9)

(தொடரும்)

# சங்கற்ப நிராகரணம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

**10. சிவசமவாதி நிராகரணம் :**

சிவசமவாதி தன் கொள்கைகளைக் கூறிமுடித்ததும், அடுத்திருந்த சங்கிராந்தவாதி அவற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான் :

பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூவகை ஞானமும் ஓரொரு நிலையல் ஒவ்வொன்றாகச் செயற்படுதல் அன்றி, ஒரே நிலையில் மூன்றும் சேர்ந்து செயற்படுதல் இல்லை. செயற்படுமாயின், கண்ணானது அழகிற் சிறந்த பொருள் ஒன்றனைக் காண்புழி, ஞாயிறு திங்கள் விளக்கு என்னும் மூன்றனுள் ஒன்று அதனைக் காட்டக் காண்பதன்றி, அம் மூன்றும் ஒருசேரக் கூடிநின்று காட்டக் காண்பதில்லை. ஆதலின் மூவகை ஞானமும் கூடி நின்றே ஒரு பொருளை அறியவேண்டும் எனக் கூறிய நின் கருத்து அமையாது.

அற்றன்று, மூவகை ஞானங்களும் ஒவ்வொன்றாகத் தனித்தனியே ஒவ்வொரு செய்தியை அறிந்துவரும் எனில், - உயிர்களுக்கு அவற்றின் நுகர் பொருள்கள் வேறாய் இருத்தலினால், உயிரறிவு தானாக ஒரு பொருளையும் அறியமாட்டாது. பொறிபுலன்கள் அறிவற்றனவாய் இருத்தலின், பாசஞானம் தானாக எப்பொருளையும் அறியவல்லதன்று. பதிஞானம் தொன்மையாகவே பேரறிவினதாக விளங்குதலால், முதல்வனுக்குப் புதிதாக உலகியற் பொருள்களைச் சுட்டியறிய வேண்டுவதில்லை.

கருவிகளெல்லாம் நீங்கி ஆணவ மலத்தினாலே மறைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், உயிரானது எதனையும் அறியாமல் 'எரியாச் செந்தழல்' போலக் கிடக்குமாயின், - எஞ்ஞான்றும் தன்னை விட்டு நீங்காமல் எப்பொழுதும் தன்னோடு பிரிவறக் கலந்து நிற்கும் இறைவனை, உயிரானது தெரிந்து கொள்ளாத குற்றம் நேருமாதலின், கட்டுநிலை பற்றிய நின் கொள்கை பொருந்துவதன்று.

மேலும், உயிரானது சிவத்தோடு கூடி ஒப்பநிற்கும் வீடுபேற்று நிலைக்கு, முன்னே ஒன்றும் அறியாமல் கிடக்கும் பச்சைப் புழுவைத் தன்னுடைய உருவமாகவேண்டும் என்றெடுத்துச் சென்ற குளவியின் இயல்பை, உவமை கூறுதல் அமையாது.

சிவம் உயிர்களுக்கு மந்திரங்களை அறிவுறுத்துத் தன்னுருவமும் இயல்பும் பெறச் செய்வதுபோல, குளவியானது புழுவை எடுத்துக்கொண்டு சென்று தனது கட்டுக்குள் வைத்து எத்தகைய மந்திரத்தினையும் அறிவுறுத்துத் தன்னுருவமும் இயல்பும் பெறச் செய்வதில்லை. ஆதலின், குளவியையும் புழுவையும் வீடுபேற்று நிலைக்கு நீ உவமை கூறியது பொருந்தாமற் புரைபடும்.

அற்றன்று, குளவி எடுத்துக்கொண்டு சென்றதொன்றே உபதேசம் போல ஆகப் பச்சைப்புழு குளவியுருவம் பெற்றதெனின், - கம்பளிப்பூச்சியானது தனது வாயின் நூலாலே கூடு கட்டி அதற்குள்ளேயிருந்து சிலநாட் சென்றபிறகு சிறகினையுடைய பறவையாகப் பறந்து செல்லக் காண்கின்றோம். ஆயின், அதனைக் குளவியோ அன்றிவேறெதுவோ வந்தெடுத்துச் செல்வதாகவும், உபதேச மொழிகள் புகல்வதாகவும் எவரும் கூறக் கேட்கிலம். ஆதலின்,

"வண்டுகளாகி மாறும் மயிர்க்குட்டி,
மற்றோர் செந்துப்
பண்டைய உருவந் தானே வேட்டுவ னுய்ப்பி
றக்கும்;

கண்டுகொள்: யோனி எல்லாம் கன்மத்தால் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம்: இச்சொல்லை கொண்டதெங்கே?

என்றதற்கேற்ப, பச்சைப்புழு குளவியாகவும், கம்பளிப்புழு வண்ணத்துப் பூச்சியாகவும், தத்தம் கன்மத்துக் கிடாக உடலமைப்பு மாறுதலே, வீடுபேற்று நிலைக்கு நீ உவமை கூறியமை தகுதியன்று.

அன்றியும், பச்சைப்புழு குளவியாக மாறுதல் போல, உயிரும் சிவத்தின் இயல்பினைப் பெறும் எனக் கூறிய நின் கருத்தினைச் சிறிது நுனித்தாராய்வுழி, அவ்வுவமை யோக நிலைக்குப் பொருந்துவதே யன்றி, ஞான நிலைக்கு அமைவதன்று.

ஏனெனில், உயிரும் சிவமும் கூடி ஒன்றுபட்டு நிற்பதே வீடுபேறு என்று நூல்களெல்லாம் முழங்கவும், நின் கூற்றின்படி உயிரும் சிவமும் வேறுபட்டிருக்கும் என்பது பெறப்படுதலின் அது குற்றமேயாம். மேலும், புழுவானது தன் நினைவால் குளவியின் உருவமும் இயல்பும் பெறுதல் போல, உயிரும் தன் தியானத்தால் வீடுபேற்று நிலையில் புதியதோர் உடலைப் பெறுதல் வேண்டும்! அவ்வாறு வீட்டு நிலையிற் புதியதோர் உடலினை எய்திய வழியும், சிவத்தோடு கூடி ஒன்றி நிற்கும் பேறு பெற மாட்டாமல் வேறுபட நிற்றலே உயிர்க்கு நேருமாயின், அத்தகையதொரு மிக எளிய நிலையை வீடுபேறென்றல் பொருளில் கூற்றாகவே முடியும்.

இம்மட்டோ! குளவியின் உருவமும் இயல்பும் பெற்ற புழுவானது, அங்ஙனம் பெற்றதற்குப் பின்பு முன்னர்ப் புழுவாக இருந்த நாம், இப்பொழுது குளவியின் உருவமும் இயல்பும் எய்திக் குளவிக்குரிய இத்தொழில்களைச் செய்யும் பேறு பெற்றோம் என நினைந்து, பெருமித இன்பம் கொள்ளுதல் இல்லை. அதுபோல, - முந்திநிலையிற் சிவத்தொடு கலந்து சிவத்தின் இயல்பினைப் பெற்ற உயிரும், அங்ஙனம் பெற்றதன் பின்பு முன்னர்ச் சிற்றுயிராக இருந்த நாம், இப்பொழுது சிவத்தின் இயல்பினைப் பெற்றுச் சிவத்திற்குரிய ஐந்தொழிலியற்றுந் திறனையும் முற்றறிவியல்பினையும் பெற்றுள்ளோம் எனவுணர்ந்து பெருமிதங் கொள்ளும் அறிவிலதாதல் வேண்டும்!

அவ்வறிவிலதாய வழி, "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம்" எல்லாம் சொல்லுதலின், அவ்வுயிர் எய்தியது வீடுபேறே யாகாதொழியும்! எனவே, வீட்டு நிலையில் உயிரானது ஓர் உடலோடு கூடியிருக்கும் என்னும் நின் கொள்கை, பலவகையிற் பிழைபாடுடைத்தாம்.

உயிர்கள் வீட்டு நிலையில் சிவத்தோடு சமநிலையில் ஒப்ப நின்று ஐந்தொழில் இயற்றி நிற்கும் என மொழிந்தாய்! நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கமெலாம், தன்னொடு நோக்க இல் நுழை கதிரின் துன்னணுப் புரையச் சிறியவாகப் பெரியோனாய சிவத்தினால் செய்யப்படும் ஐந்தொழில்களை, அணுவுக்கும் அணுவாயுள்ள சிற்றுயிர்கள் செய்யும் என்பது சிறிதும் ஏற்புடைத்தாகாது.

நம்பியாரூரர் முதலையுண்ட மதலையை மீட்டும் உயிர்பெற்றெழுந்துவரச் செய்தனரல்லரோ எனின், - 'கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே' என அவர் இறைவனை வேண்டி நின்றனரே அன்றித் தாமே தன் முனைப்பால் அங்ஙனம் செய்யப் புகுந்தாரல்லர்!

இரும்பானது நெருப்போடு கூடி நெருப்பின் உருவத்தைப் பெற்றபோது அந்நெருப்புச் செய்யும் தொழில்கள் எல்லாவற்றையும் இரும்பு செய்தல் போல, உயிர்கள் இறைவனோடு கூடி இறைத் தன்மை பெற்றபோது அவ்விறைவன் செய்யும் தொழில்களைச் செய்தல் கூடும் எனின். — தண்ணீரானது நெருப்போடு சேர்ந்து எத்துணைதான் வெம்மை பெற்றதாயினும், அந்நெருப்பைப் போல் பிற பொருள்களை எரிக்கும் தன்மை

யுடைய தாகாமை சிறுமகாரும் அறிவர். நெருப்பைச் சேர்ந்த இரும்புபோல வெந்நீர் சிறு வைக்கோலையும் எரிக்கவல்ல தன்று. நெருப்பின் வெம்மை அதனோடு மாறுபட்ட தண்ணீரோடு கூடிய காரணத்தால் பிற பொருள்களைச் சுட்டெரிக்கும் வன்மை இழந்து நின்றதெனின், நெருப்பு எங்கேனும் தான் தனியே தொழிற்பட்ட துண்டாயிற் கூறுக. "அங்கியும் ஒன்றைத் தங்கி யின் றல்லது தன்தொழில் நடத்தாது" என்றறிக.

நெருப்பு இரும்பைச் சார்ந்து நின்று தன்னுடைய தொழிலைச் செய்து சென்ற தன்றி, இரும்பு நெருப்பின் தொழிலைச் செய்யுந் தன்மை யாண்டும் இல்லை.

ஒரு பேயானது ஒருவனைப் பற்றிக் கொண்டபோழ்து, அவன் செயல்கள் எல்லாம் அப்பேயின் செயல்களாகக் காணப்படுகின்றன அல்லவோ? அதுபோல அருளைப்பெற்ற உயிர்கள் ஐந்தொழில்கள் இயற்றும் எனின்,—சிவம் இவ்வுயிராய் இருந்து தன் தொழில்களைச் செய்யுமாயின், இவ்வுயிர் அச் சிவத்தின் தொழிலைச் செய்வதற்கு எதனைப் பற்றுக்கோடாகக் கொள்ளும்.

ஐந்தொழில்களைச் செய்வதற்கு உயிர்கள் உரியனவாம் எனில்—ஒருவனைப் பேய் பற்றிக் கொண்டிருந்த பின்னர் அவனை அந்தப் பேய் விட்டு நீங்கிய நிலையில் நிகழும் செயல்களெல்லாம் இவனுடைய செயல்களோ? அன்றி அப்பேயின் செயல்களோ? இவனது செயல்களே யாமாயின் அப்பேய் பிடித்துக் கொண்டிருந்த பொழுது இவன் செய்த தொழில்கள் எல்லாம் அப்பேயின் செயல்களே என்றறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்தால், பேய் கோட்பட்டான்செயலாகப்பேய்தன்செயல்களை வெளிப்படுத்திச் செல்லுதல்போலவும், இரும்பைப் பற்றி நின்ற நெருப்பானது தன் செயல்களைச் செய்து கழிதல் போலவும், சிவமும் உயிரின் பாற் பதிந்து நின்று தன் செயல்களை நிகழ்த்துதலன்றி, உயிர் சிவத்தின் தொழிலைச் செய்ய மாட்டாது என்பது தெரியப்படும்.

அன்றியும் சிவமோ என்ஞான்றும் அழிவில்லாத பேராற்றற் பெரும் பொருள். உயிரோ இமைப் பொழுதில் மறைந்தொழியும் எளிய சிறு பொருள்; ஆதலின் இத்தகைய உயிர் சிவத்தின் ஐந்தொழில்களைச் செய்யவல்லதாம் என்பவர்கள் "மைத்துனர் பல்கி மருந்திற் றெளியாத பித்தர் என்றே எள்ளப்படுவர்". எனவே, "உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்கு உரியன். உயிர் தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்து" என்பதே முடிந்த முடிபாம்.

வீட்டு நிலையில் உயிர்களை ஐந்தொழில் நிகழ்த்தலே யன்றி முற்றறிவும் உடையன ஆகும் என்று கூறுநய்- "மயக்கம் உறநும் மருந்திற்றெளிந்தும் பெயர்த்துணர்ந்து" வரும் இயல்பிற்றாய உயிர்க்கு எல்லாவற்றையும் ஒருங்கே அறியுந் தன்மைஉளதாகாது.

எல்லாவற்றையும் அறியும் இயல்பினதாகிய திருவருள் உயிரின்பாற் பதிதலால், உயிர் எல்லாவற்றையும் அறிய வல்லதாகும் என நீ கூறின்,—உயிர்களைச் சிற்றறிவே யுடையன என்று நூல்கள் கூறுதல் பிழையாய் முடியும்.

பேய் கோட்பட்டார் அப்பேய்க்கு உண்டாகிய எதிர்கால நிகழ்ச்சி யறிவையெல்லாம் தங்கள்பாற் கொண்டு உரையாடக் காண்கின்றனமே எனில், ஊமையாய்க் குருடனுமாயினான் ஒருவன்பால், ஊமையன்றிக் குருடும் அல்லாத பேய் போந்து பொருந்திய வழி, அவன் நாவால் ஒன்றைச் சொல்வதும், கண்ணால் ஒன்றைக் கண்டதும் இல்லை. ஆதலின், பேயின் தன்மை யெல்லாம் பேய்கோட்பட்டானுக்கு நிகழும் என்றல் ஒல்லாது. "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில் நாழி" யாதல்போல, திருவருட் பேரறிவோடு கூடி நின்றதேயாயினும், உயிருக்குள்ள சிற்றறிவே அதற்கு நிகழ்வதன்றி, இறைக்குரிய முற்றறிவு அதன்கண் நிகழ்தல் இயலாது.

ஒளி என்னும் பொதுமையால் ஒத்து ஒன்றுமாயினும், பிறிதொரு துணையை

இன்றியமையாமல் அதுவதுவாய் முந்திக் காணும் கண்ணொளிக்கும், அதுபோலத் தனக்கொரு துணை வேண்டாது தானே பிறவற்றிற்குத் துணையாய் எல்லா வற்றையும் ஒருங்கே விளக்கி நிற்கும் ஞாயிற்றினொளிக்கும் தம்முள் வேற்றுமை பெரிதாயினாற்போல, வீட்டு நிலையினும் உயிரின் சிற்றறிவிற்கும் சிவத்தின் முற்றறிவிற்கும் உள்ள இடையீடு மிகப் பெரியதாகும்.

புகலரும் அசத்தர் தம்பால்
பொருந்திய அலகை யேபோல்,
அகிலமும் உணரும் ஈசன்
அருளுயிர் மேவ லாலே,
சகலமும் நிகழ வேண்டும்;
தலைவன்ஐந் தொழிலுந் தானே
இகலற இயற்றல் வேண்டும்
என்றது, நன்றி இன்றே"

"இன்றுநோக் குரைந டக்கும்
இயல்பிலோர்க்கு, இணைய வாய்ந்து
நின்றதோர் அலகை நேர்ந்தால்
நிகழ்வதென்? அதுபோல் உள்ளத்
தோன்றிய உணர்வு தம்பால்
உள்ளது நிகழ்த்தும்; ஈசன்
தன்தொழில் நடாத்தும் மேனி
தனக்கெனக் கொண்டு தானே.

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள்களும், அவற்றின் பொருளும் ஈண்டு அறிதற்குரியன.

வீடுபேற்றில் உயிரும் சிவமும் ஒன்றாய் விடும் எனில், இரண்டு பொருள்களுள் ஒன்று அழிந்துபோம்; அழியாதெனில், இரண்டு பொருள்களும் ஒன்றுதலில்லை.

இனி, அங்ஙனம் ஒன்றுதலாகிய பரமுத்தி எய்தாமல் உடலோடு கூடிச் சீவன்முத்தனாய் நிற்கும் எனின், "தனக்குவமை இல்லாத" சிவத்திற்குச் சிவன் முத்தனாய அவ்வுயிர் சமம் எனப்படும் நிலை எய்துமாகலன், அஃது அமையாது.

வீடுபேறு எய்தும் உயிர், முன்னரேவீடு பேறு எய்தியுள்ள நற்றவர் கூட்டத்தின் கண் சென்று சேரும் எனின் - அது சிவப்பேறடைவு ஆகிய சாயுச்சிய முத்தியாகாமல், சிவனுலகிற் சேர்தல் என்னும் சாலோக முத்தியேயாகும். மேலும், அவ்வுயிர் நற்றவர் கூட்டத்தின்கண் சென்று சேர்தற்கு ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும். உயிர் உடலோடு கூடியிருக்குமாயின், அங்ஙனம் இருக்குமட்டும் அது வீடுபேறு எய்தியதெனப் படாது. இறைவன் திருவருளைப்பெற்றவர்கள் உடலோடு கூடியிருந்தார்களாயினும், அவர்கட்கு உடற்றொடர்பும் பற்றும் இலவாய், அவர்கள் தம் "உடம்பும் மிகை" எனவே கருதியிருப்பர்.

அற்றன்று, வீடுபேற்றில் உயிர்கள் அசுத்த மாயா சரீரத்தினைப் பொருந்தாமல், சுத்தமாயா சரீரமே பெற்று நிற்பர் எனின், - அறியாது கூறினாய்! மும்மலங்களும் நீங்கி வீடுபேறு பெற்ற நிலையில் ஒருடல் தோன்றும் என்ற நின் கூற்று, தலைமுறை பலவாக உரலில் செற்குற்றி வரும் ஓர் உலக்கையின் நுனியில், கவடும் கோடும் தளிரும் மலரும் தோன்றிற்று என்றாற் போன்ற பொருந்தாக் கூற்றேயாம்.

அற்றன்று, வீடுபேறு பெற்ற உயிர்கள் தம் விருப்பத்தினால் தாமாகவே ஒருடலைத் தோற்றுவித்துக்கொண்டு அதன்கண் பெரிதும் விருப்புற்று வாழும் எனின், -நன்று மொழிந்தனை! ஒருவனுக்கு ஒருடல் தோன்றுமெனின், அது கன்மத்தாலன்றித் தோன்றாது; அக்கன்மந்தானும் ஆணவமலங்கிடந்தாலன்றி உண்டாகாது. எனவே, நீ கூறும் வீட்டு நிலையில் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றனுள் ஒன்றேனும் நினக்குக் கழிந்ததில்லையாம். ஆதலின் நினது வீட்டியல்பினைச் சிவனுலகு சேர்தல், சிவனுருப் பெறுதல், சிவனருகிருத்தல் எனப் பொருள்படும் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பத முத்திகளாகவே அறிஞர்கள் கொள்ளுகிற்பர்.

(தொடரும்)

# "அகர முதல எழுத்தேல்லாம்"

## முன்னுரை

உலகப் பெருங் கவிஞர்களுள் தலை சிறந்த ஒருவராகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலின் முதற் கண், "கடவுள் வாழ்த்து"க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துவதற்குத் தலைப்படும் முன்னர், உலகிற்குக் கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத கடமையாகின்றது. கடவுள் ஒருவர் உண்டு என்னும் உண்மையை உணர்த்த, அவர்வேறு எத்துணையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால் அவர் அங்ஙனமெல்லாம் செய்யாமல், தமிழிலக்கணக் கருத்தினையே கையாளுகின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியர் தாம் இயற்றியருளிய தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கண நூலில் "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனப் பணித்தருளிய நுட்பம் உணர்ந்து,

> "அகர முதல எழுத்தெல்லாம், ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறளில், இறைவனுண்மை நிறுவுதற்குத் தமிழிலக்கண அமைப்பினைத் தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகர எழுத்தினையே உவமை காட்டியுள்ள அருமைப்பாடு பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது.

## அகரவுவமை:

'அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்' என ஆசிரியர் மெய்கண்ட சிவமும், 'அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே' என ஆசிரியர் அருள்நந்தி சிவமும், திருவள்ளுவர் அருளிச்செய்த அகரவுவமையினைத் திறன் தெரிந்து போற்றித் தழீஇக் கொண்டுள்ளமை காணலாம். இங்ஙனமே வாழையடி வாழையாகப் பிற்போந்த சான்றோர்கள் அனைவரும், திருவள்ளுவர் கூறிய இவ் அகரவுவமையினைப் பெரிதும் வியந்து புகழ்ந்து, தத்தம் நூல்களிற் பொன்னினும் மணியினும் போற்றிப் பொதிந்து கொண்டு சிறப்பித்துள்ளமை அறிந்தின்புறற்பாலது.

இவ்வாறு பிற்போந்த சான்றோர்கள் அனைவரும் போற்றி மகிழும் வண்ணம் இறையுண்மையை நிறுவுதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் காட்டியருளிய அகர வுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய், நுண்பொருள்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது.

## நுண்பொருள்கள்:

(1) ஆதி அகரம் விகாரத்தானன்றி நாத மாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்கின்றது; அதுபோலவே இறைவனும் இயல்பாகத் திரிபின்றி இயற்கைவடிவினனாகி அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கின்றது; அதுபோலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர்களினும் மெய்களினும் கலந்து நின்று அவற்றை ஒலிப்பிக்கின்றது; அதுபோலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களிலும் அறிவுடைய உயிர்களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயக்குவிக்கின்றான்.

(4) எழுத்துக்கள் மெய் உயிர் என இரண்டாய் அகர முதலவாதல் போலப்

பிரபஞ்சமும் சேதனம் அசேதனம் என இரண்டாய் ஆதிபகவனுகிய முதலையுடையது. உயிர் எழுத்து சிவான்மாவிற்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமையாம் என்பது. இதனை,

''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து'

எனச் சைவ சித்தாந்த சந்தானுசிரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவம் தாம் இயற்றிய 'திருவருட்பயன்' என்னும் நூலில் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

(5) அகரம் மெய்களினும் உயிர்களினும் ஒன்றிக் கலந்து நிற்பினும், அம்மெய் உயிர்களின் வேருகத் தனித்தும் நிற்கின்றது; அதுபோல இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்றுன் எனினும், அவற்றின் வேருகத் தனித்தும் விளங்குகின்றுன்.

(6) அகரம் உயிர்களோடும் மெய்களோடும் ஒன்ருய் வேருய் உடனுய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப்பொருள் அறிவனர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை; அதுபோலவே இறைவனும் உலகுயிர்களோடு கலப்பினுல், 'உடலின் உயிர்போல்' **ஒன்ருகியும்**, பொருட்டன்மையாற் 'கண்ணன அருக்கன்போல்' **வேருகியும்**, உயிர்க்குயிராதற் றன்மையாற் 'கண்மணியின ஆன்ம போதம் போல்' **உடனுகியும்** நின்று அருள் செய்து போதருகின்றுனயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அனைத்து அருளியல்பு விளங்குவதில்லை.

(7) அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற பிறந்தொலிக்கும் ஏனைய மெய் உயிர் எழுத்துக்களும் ஒருவனுல் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும் ஈறும் உடையனவாகக் கருதப்படுமேனினும், முக்காலத்து மக்களாலும் எக்காலத்தும் ஒலிக்கப்படுதலின், அவை என்றும் உளவாய் நின்றிலங்கும் அழிவில் பொருள்களேயாம்; அதுபோல இறைவனும் இறைவனுல் இயக்கப்பெறும் உலகுயிர்களும் முத்தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும் என்றும் உளவாம் அழிவில் பொருள்களேயாகும். ''பதியினைப்போற் பசு பாசம் அனுதி'' என்பது திருமூலர் திருமந்திரம்.

(8) அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமேயன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்குகின்றுன். 'ஒருவனுமே பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ' என்பர் மணிவாசகர். ''இராமேச்சுரத்து ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே'' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

(9) அகர ஒலி ஒன்றே வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப்படுகின்றது; அதுபோல இறைவன் ஒருவனே வெவ்வேறு சமயத்தினராற்பல்வேறு வடிவினனுகவும்பெயரினனுகவும் வைத்து வழிபடப்படுகின்றுன். ''ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்பது திருவாசகம்.

(10) பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தாமொழிகளில் அகரம் முதலிய ஒலிகட்கு வரிவடிவில் எழுத்துக்கள் இல்லையாயினும், திருந்திய இலக்கியச் செம்மொழிகளில் ஒலிவகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக்கப்பட்டுள்ளன; அதுபோல இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் (Idols) வேண்டா எனக் கரைந்து திரியும் ஒரு சிலர் உளரெனினும், ஒலி வகைகளைக் காட்டுவதற்கு எழுத்தமைப்புக்கள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழர் கொள்கை.

"கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உரு பாம்வடி
வெழுத்தே"

என்பது நன்னூல் விருத்தியுரை மேற்கோள். இந்நூல் விக்கிரக வழிபாட்டின் இன்றியமையாமையினையும், சிறப்பினையும் யாவரும் இனிது தெளியலாம்.

## முடிவுரை :

இங்ஙனம் அறிஞராய்க் கருதி யுணர வல்லார் கருதி யுணர்ந்து மகிழத்தகும் சிறந்த கருத்துக்கள் பலப்பலவும், இவ்வகர உவமையின்கண் செறிந்து அமைந்துள்ளமை கண்டுகொள்க! இங்ஙனம் தாம் காட்டிய ஓர் உவமையின் வாயிலாகவே பல அரிய நுண்பொருள்கள் வெளிப்பட்டு விளங்கும்படி செய்தருளிய ஆசிரியர் திருவள்ளுவரின் தெய்வப் புலமையினை வியந்து நினைந்து, அவரைப் போற்றி உய்ய முயலுவோமாக!

திகழும் திருவள்ளுவனார்தம்
தெய்வப் புலமை இலச்சினையா
நிகரின் றிலங்கு திருக்குறள் நூல்
நின்று நிலவும் முழுதெனினும்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந்(து) அவர்சொற்ற
அகர உவமை தான்ஒன்றே
அமைதல் சாலும் எனல்தேற்றம்.

—ஆசிரியர்.



தஞ்சை ஹரிகதா காலட்சேபப் பயிற்சி நிலையத்தின் மூன்றும் ஆண்டு விழாவில் மாணவி குமாரி வி. மங்களம், நமது அருந்துணை ஆசிரியர் அவர்களால் நற்சான்று இதழும் பதக்கமும் வழங்கப் பெறுதல்.

# சித்தர்களும் சித்த மருந்தும்

திரு வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
(மாகாணத் தலைமை நீதிபதி, சென்னை.)

சித்தியடைந்தவர்கள் **சித்தர்கள்.** சித்தியென்பது இங்கு முக்தியென்று பொருள். நினைத்தபோது விபூதி, குங்குமம், மாம்பழம் முதலியன கொடுப்பவர்கள்தான் சித்தர்கள் என்று மக்கள் சிலர் நினைக்கின்றனர். உண்மைச் சித்தர்கள் மக்களுக்கு இந்த ஜால வித்தைகளைக் காட்டிப் பிரமை உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. கல்வியற்ற முரடர்கள் சிலர், சில மந்திரங்களை உருச்செய்து குட்டிச் சாத்தான்களை வசியம் செய்து கொண்டு, எத்தனையோ ஆச்சரியமான ஜால வித்தைகள் செய்வதை, நாம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். வீட்டின் கூரையில் கற்கள் விழுவதையும், இலையிலிட்ட சாதம் மலமாவதையும், வீட்டினுள் இருக்கும் துணிமணிகள் நெருப்புப் பிடித்து எரிவதையும், பலர் பார்த்தும் கேட்டும் இருக்கலாம். இவ்விதமான வித்தைகளைச் செய்பவர்களை முக்தி யடைந்தவர்களென்று சொல்லுவது பொருத்தமாகுமா?

சித்தர்களின் தத்துவப்படி மனிதன் இறந்துவிட்டால் முக்தியென்பது கிடையாது. இறந்தவன் பிணமாகிவிடுகிறான். மனிதனின் இயற்கை வடிவம் இறந்து போகக் கூடியதன்று. மனிதன் தன் அறியாமையின் காரணத்தினால் இவ்வுடலை அழிந்துபோக விடுகிறான். முக்தியென்பது பிறப்பைத் தவிர்ப்பது. பிறப்பைத் தவிர்க்க வேண்டில் இறப்பு கூடாது. இறந்தவன் மறுபடியும் பிறந்தேயாதல் வேண்டும்.

ஆகவே, இந்த மறுபிறப்பைத் தவிர்த்தவர்களே **சித்தர்கள்.** பிறந்தவன் இறந்துதானாகவேண்டுமென்று கூறும் பல சாத்திரங்களைச் சித்தர்கள் அறவே புறக்கணிக்கின்றனர், சித்தர்களிலே சிலர், இறந்தவன் இறந்தவன்தான்; மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டவன் தான்; மறு பிறப்புக் கிடையாதென்றே அபிப்ராயப்படுகின்றனர். பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த உடல் இறந்த பிறகு பிருதிவி பிருதிவியுடனும், அப்பு அப்புடனும், தேயு நெருப்புடனும், வாயு வாயுவுடனும், கலந்து விடுகின்றன என்று சொல்லுகின்றனர்.

**'சிவவாக்கியர்'** இறந்தவன் பிறப்பதில்லை யென்று சொல்கிறார்;

" கறந்தபால் முலைப்புகா
கடைந்தவெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை
யுயிர்களுமுடற் புகா
விரிந்தபூ வுதிர்ந்த காயும் மீண்டு
போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை
யில்லையில்லை யில்லையே"

இந்த அபிப்பிராயம் ஒரு புறமிருக்கட்டும். இந்த உடலை எப்படி இறவாமல் வைத்திருப்பதென்பது யாரும் கேட்க வேண்டிய கேள்விதானே?

உலகங்களெல்லாம் அணுக்களாலாக்கப்பெற்றவை. மனிதனின் உடலும் அணுக்களாலாக்கப் பெற்றது. இந்த அணுக்கள் சுயமாகவே வெகு சக்தி வாய்ந்தவை. பஞ்ச பூதங்களாலான இவ்வுடலை இந்தச் சக்திகள் இறுக்கிப் பிடித்துக் கொண்டுள்ளன. ஆனால் மனிதன் தன் அறிவீனத்தினால் இந்தப் பஞ்ச பூதங்களின் நிலையைக் கலைத்து விடுகிறான். இவ்வுடலில் பஞ்ச பூதங்கள் அதனதன் எடைப்படி, அதாவது **பிருதிவி** - $1\frac{1}{4}$ பங்கு, **அப்பு** $1\frac{1}{2}$ பங்கு, **தேயு** $1$ பங்கு, **வாயு** $\frac{3}{4}$ பங்கு; **ஆகாயம்** $\frac{1}{2}$ பங்கு வீதம் பரிணமித்துள்ளன. இந்த எடைகளின் படி மனித உடல் இயங்கினால் மரணமே கிடையாது. ஆனால் மனிதனின் உடலில்

ஷடி பஞ்சபூதங்கள் அதனதன் அளவின் படி இயங்குவதில்லை. அதற்குக் காரணம் அவன் மனம்தான். வஞ்சனை, பொய், சூது, கபடம், பயம், கோபம், பொறாமை என்ற பல துர்க்குணங்கள் மனத்தைத் துன்புறுத்தி, ஆத்மானுபவத்தை நொடித்து விடுகின்றன. இதன் காரணமாகப் பஞ்ச பூதங்களும், தத்தம் நிலைகளிலிருந்து மாறுபாடடைகின்றன. சிவ அணுக்களும் தளர்ந்து போகின்றன. பிணி, மூப்பு மரணத்தை வெகு விரைவில் உடல் அடைகின்றது.

இந்த அணுக்கள் தளராமலிருக்கும்படி சித்தர்கள் முக்கியமாகப் பல சாதனங்களைக் கையாண்டுவந்ததும் அல்லாமல், ஆரம்ப காலங்களில் சில மருந்துகளையும் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது.

பல வைப்புச் சரக்குகளைச் செய்து அவைகளை அணுக்களாக்கி, மறுபடியும் அந்த அணுக்களைக் கட்டினார்கள். அவைகளையே கட்டு மருந்துகளென்று சித்த வைத்தியர்கள் சொல்வது. லிங்கக் கட்டு, தாளகக் கட்டு, வீரக் கட்டு, பூரக் கட்டு, இரசக்கட்டு என்பர். இந்தக் கட்டுகளை நெருப்புக்கு ஜெயிக்குமாறு செய்து விடுவர். இந்தக் கட்டு மருந்துகளை உபயோகிப்பதனால் உடலிலுள்ள அணுக்கள் கட்டுண்டு பல்லாயிர வருடங்கள் உயிர் வாழலாமென்பது சித்தர்கள் மரபு.

சித்தர்கள் உடலை வளர்ப்பது முக்கியம் என்று கருதினர். மெய்ஞ் ஞானம் அடைவதற்கு உயிர் முக்கியம். உயிர் வேண்டுமாயின் உடல் வேண்டும். ஆகவேதான் திருமூலர் ஆகிய அருட்பெருஞ் சித்தர்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்கோயில்கொண்டான்என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே"

என்று தமது திருமந்திரம் என்னும் சிறந்த நூலில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இறந்தவன் முக்தியடைவதென்பது முரண்பாடானதென்று மேலே சொன்னோம். சரி! ஆனால் அந்தச் சித்தர் இறவாமல் இருக்கிறார்களா? அவர்கள் எங்குள்ளனர் என்பது கேள்வி?

சித்தர்கள் குகைகளிலும் காடுகளிலும் வசித்து வந்தார்கள், வசித்து வருகிறார்களென்பது துணிபு. அவர்கள் சாதனை புரியுங் காலங்களில் காடுகளுக்கு ஓட வேண்டிய நிலையை மனிதர்கள் உண்டாக்கிவிட்டனர். எந்த மரத்தடியிலோ, இடிந்த மண்டபங்களிலோ உட்கார்ந்து கொண்டு தனித்துத் தன் வேலையைத் தான் பார்த்துக்கொண்டிருப்பவனை மனிதர்கள் சும்மா விடுகிறார்களா? பேசாமல் உட்கார்ந்தால் சிலர் அவனை ஊமையென்பார்கள் அல்லது செவிடன் என்று சிலர் சொல்வர். சிலர் இவன் யாரோ திருடன் என்பார்கள், மற்றும் சிலர் அவனைக் கல்லாலடிப்பர். மற்றும் சிலர் இவர் சாமியார் என்று சொல்லிக் கொண்டு கும்பல் கும்பலாகச் சென்று தங்கள் ஓயாத துக்கங்களைக் கொண்டு போய்க்கொட்டுவார்கள். ஆகவே ஒரு சாதகன் எப்படி இப்படிப்பட்ட மக்களினிடையில் வாசம் செய்யமுடியும். காட்டிலுள்ள மிருகங்கள், மனிதர்களைக் காட்டிலும் தன்மடங்கு உயர்ந்தனவென்று சாதகன் மறைந்து ஒளிந்து விடுகின்றான். நாட்டிலுள்ள சில மகான்கள் பைத்தியக்காரர்களைப்போல் உடைதரித்து,பைத்தியக்காரர்களைப் போலவே பேசி மக்களை விரட்டுவார்கள். இதற்குக் காரணம் நான் மறுபடியும் விளக்கத்தேவையில்லை.

சித்தர்கள் தங்களுடைய உயர்ந்த நிலையில் உருவ வழிபாட்டைப் புறக்கணித்தவர்களென்றே சொல்லவேண்டும். அவர்கள் தங்கள் சாதனைகளை மரத்தடிகளில் உட்கார்ந்தோ, படுத்தோ செய்துவந்தனரென்று தெரிகிறது. அவர்கள் தங்கள் சாதனைகளினால் பல சித்திகள் பெற்றனர். சித்திகளுக்காகப் பாடுபட்டவர்கள் அல்

லர். தானாகவே பல சித்திகள் அவர்களை வந்து அண்டின. அவைகளையே அஷ்டமா சித்திகளென்பர். அவற்றினுடைய விவரம் :

(1) அணிமா: சூட்சுமம் காரணம்மகா காரண சரீரமென்பதில் மகாகாரண சரீரமாய் அணுவில் அணுவாக நுழைவது. அதாவது இந்த ஸ்தூல உடலை ஒரு அணுரூபமாய்ச் செய்துகொண்டு ஆகாயத்தில் பறப்பது.

(2) மகிமா: விசுவரூபமாய்த்தோன்றல். அதாவது இந்த ஸ்தூல உடலை மலையளவு வேண்டுமானாலும் பெருக்கிக் கொள்வது. இராவணன் முன்னர் அனுமான் தன் வாலை நீட்டிக்கொண்டதனை நாம் இங்கு நினைவு கொள்ளலாம்.

(3) கரிமா: எவ்வளவு பளுவாகவேண்டுமானாலும் செய்துகொள்ளுதல், எத்தனை Bull-dozer களானாலும், Crane களானாலும் அவ்வித உடலை அசைக்கமுடியாது.

(3) லகிமா: இறக்கையைப்போல் தக்கையாய் உடலைச் சுமையின்றிச் செய்து கொள்ளல்.

(5) பிராப்தி: எவ்வுலகத்தும் எவ்விடத்தும் தடையற்றுச் சஞ்சரித்து வருதல்.

(6) பிராகாமியம்: பிறர் காயத்தில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல் (கூடுவிட்டுக் கூடு பாய்தல்)

(7) ஈசத்துவம்: பஞ்ச கிர்த்தியத் தொழிலை நடத்தல் (எல்லா உயர்களுக்கும், ஜடவஸ்துக்களுக்கும் உயிர்ந்த உயிராயிருத்தல்)

(8) வசித்துவம்: தேவர் முதலிய அனைவரையும் தன் வசப்படும்படி செய்து கொள்ளுதல்.

"அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான்
பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை அணிமாவாம்;
உவரி ஞால முதன்மேலென்
றுறையுஞ் சிவாந்தம் ஆறுறும்
உள்ளும் புறனும் அகலாதே
நிறையும் பெருமை தனையன்றோ
மகிமா வென்னும் நிரம்பிய நூல். (1)

இலகு மேரு பாரம்போல்
இருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு வான தூலமென
இருப்பது இலகிமாவாகும்;
இலகு வான பரவணுப்போல்
இருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகு மேரு பாரமென
இருப்ப தன்றோ கரிமாவாம். (2)

பிலத்தில் இருந்தோன் அயனுலகிற்
புகுதல் மீண்டு பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தி
அதாம்;பரகா யத்தின் கண்ணுதல்வான்
புலத்தின் இயங்கல் இச்சித்த
போகம் அனைத்தும் தானிருக்குந்
தலத்தின் நினைந்த படிவருதல்
பிராகா மியம்ஆந் தவக்கொடியீர். (3)

விண்ணில் இரவி தன்னுடம்பின்
வெயிலால் அனைத்தும் விளங்குதல்போல்
மண்ணில் உளவாம் பொருள்பலவுங்
கால மூன்றும் வானத்தின்
கண்ணில் உளவாம் பொருளுந்தன்
காயத் தொளியால் இருந்தறிதல்
எண்ணில் இதுவும் மறையொருசார்
பிராகா மியம்என் றியம்புமால். (4)

ஈசன் எனமுத் தொழிலுந்தன்
இச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத்
திகழ்வது ஈசத் துவம்ஆகும்
பூசல் அவுணர் புள்விலங்கு
பூத மனிதர் முதலுலகும்
வாசவாதி யெண்மருந் தன்
வசமாக் கொள்கை வசித்துவம்ஆம். (5)

- திருவிளையாடற் புராணம்.

இந்த சித்திகளைப் பெறுவது சீவன் முக்தனுடைய குறியன்று. இவைகளினால் மாத்திரம் ஒருவன் ஞான சித்தியை யடைய முடியாது. ஞானசித்தியடைவதற்கு முன் மேற்படி சித்திகள் அடையப்பெறுதல் வேண்டும். ஞான சித்தியடைவதே சித்தர்கள் முடிவு. தான் அவனாகவும், அவன் தானாகவும் பிரமாணிப்பதே ஞான சித்தி. அதுவே அஹம்பிரம்மோஸ்மி! ஓம்சிவோஹம். ஆகவே வாயளவில் அகம் பிரம்மோஸ்மி! ஓம் சிவோஹம்! என்று பிதற்றுவதனால் ஏதாவதுபயன் பெறமுடியுமாவென்பதை நாம் ஆலோசித்தல் வேண்டும்.

(தொடரும்)



ஸ்ரீ பகவதி அம்மன், கன்னியாகுமாரி

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR
MADRAS

# ஆதிபகவன்

## முன்னுரை:

உலகிற் சில மதங்கள் கடவுளை ஆணாக வைத்துப் போற்றுகின்றன. மற்றும் சில மதங்கள் கடவுளைப் பெண்ணாக வைத்துப் போற்றுகின்றன. ஆனால் தமிழர்கள் தொன்று தொட்டே கடவுளைத் தனியே ஆணாகவோ பெண்ணாகவோ கருதாமல், இருகூறும் இயைந்த நிலையில் இனிது வழிபட்டு வருகின்றனர்.

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

என ஐங்குறுநூறு என்னும் சங்கநூல், அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் அருமைப் பாட்டினை வியந்து துதிக்கின்றது,

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

எனப் புறநானூறு இதனைப் போற்றுகின்றது. இவ்வாற்றால் மிகப் பழைய காலத்திலேயே, தமிழ்ப் பெருஞ்சான்றோர்கள், இறைவன் "மாதியலும் பாதியன்" என்னும் நிலையில் விளங்கும் மாண்பினைப் போற்றி மகிழ்ந்த தன்மையினை, நாம் நன்கினிது உணரலாம்.

## ஆண் பெண் அமைப்பு

இவ்வுலகியற்கை யமைப்பினை நாம் கூர்ந்து காண்போமாயின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திலும் ஆண் பெண் பாகுபாடு அமைந்து கிடத்தலைக் காணலாம். புற்பூண்டுகளிலும் மரஞ் செடி கொடிகளிலும் ஆண் பெண் அமைப்பு தவறாமற் பொருந்தியுள்ளது; கற்களிலும்கூட, ஆண்கல் பெண்கல் முதலிய பாகுபாடுகள் இருப்பதாகச் சிற்பிகள் கூறுகின்றனர்.

இறைவன் தாயும் தந்தையும் ஆக, அம்மையும் அப்பனும் ஆக, சிவமும் சக்தியும் ஆகத் தன் திருவுருவத்திலேயே இருவேறு வகைப்பட்ட தன்மைகளைக் கொண்டு திகழ்தலினால்தான், உயிர் வடிவங்கள் அனைத்தும் குறியானும் குணத்தானும் ஆண் பெண் என அவ்வப் பிறவிக்குள் இருவேறு வகையாய் அடங்கித் தம்முள் கூடிக் களித்து மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றன. உலகியல் வாழ்வுகள் அனைத்தும் சிவமும் சக்தியும் தம்முள் இயைந்து ஒன்றி நிற்கும் பெற்றியின் விளைவேயாகும்.

இறைவன் தன் பாதி ஆண் வடிவத்தில் தோல் உடுத்துக் குழையணிந்து, பால் வெள்ளை நீறுபூசிச் சூலம் ஏந்தித் திகழ்கின்றான்; பிறிதொரு பாதி பெண் வடிவத்தில் துகில் உடுத்துத் தோடு அணிந்து, பசுஞ்சாந்து பூசிப் பைங்கிளி ஏந்தி வளையல்கள் தரித்து வயங்குகின்றான் எனக் குறிப்பிட்டு, இத்தகைய இறைவனின் திருவுருவத்தினைத் "**தொன்மைக் கோலம்**" என மாணிக்கவாசகர் விதந்து வியந்து பாராட்டிப் பாடியிருத்தல், அறிந்து மகிழற்பாலது.

## குமரகுருபரர்

இத்தகைய அர்த்தநாரீசுவரத் திருவுருவின் சிறப்புக் குறித்துக் குமரகுருபர

சுவாமிகள், தமது செந்தமிழ் இலக்கணப் புலமை நலந்தோன்றப் பின்வரும் கருத்தமையப் பாடுகின்றார்; "உலகப் பற்றை நீத்த மெய்ஞ்ஞானிகளுக்கு ஐந்தொழில் நிகழ்த்தும் தனது ஆனந்த நடனத்தைக் காட்டுதற்காக, அட்டமூர்த்தியாக விளங்கும் சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் உருவம் ஒன்றாகவே உள்ளது. அவ்வுருவத்தினை ஆண்பால் வடிவம் பற்றி 'ஒருவன்' என்று சொல்வேனா? அல்லது பெண்பால் வடிவம்பற்றி 'ஒருத்தி' என்று சொல்வேனா? இருபாலுள் எதுபற்றிக் குறிப்பிடினும் பிறிதொருபால் விடுபட்டே போகும்.

" ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப"

என்னும் இலக்கணச் சூத்திரம், 'ஒருவர்' என்னும் சொல் இருபாலையும் குறித்து ஏற்ற பெற்றி வரும் என விளக்குகின்றது. ஆண் பெண் ஆகிய இருபாலாரையும் ஒன்று சேர்த்துக் குறிப்பிடத்தக்க நிலையில், தமிழ் மொழியில், "ஒருவர்" என்னும் அழகிய சொல் இல்லாமற் போயிருக்குமாயின், யான் வேறு எச்சொல்லால் அத்திருவுருவத்தினைக் குறிப்பிடுதல் இயலும்?'' என்கின்றார்.

" ...ஒருவனுக்கும் ஒருத்திக்கும்
உருவொன் றால்! அவ்
உருவை இல்து ஒருத்தன் என்கோ?
ஒருத்தி என்கோ?
இருவருக்கும் உரித்தாக
ஒருவர் என்றோர்
இயற்சொல் இலது எனின், யான்
மற்றுஎன் சொல்கேனே?''

இவ்வாறே மற்றோர் இடத்திலும் குமரகுருபரர் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றி அழகுறப் புனைந்து பாடி மகிழ்வுறுத்துகின்றார்; "செவ் வாயையும் கருங் கண்ணையும் உடைய பைந்தோகை ஆகிய உமாதேவிக்கும், சந்திரனைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமானுக்கும் திருவுருவம் ஒன்றாகவே உள்ளது. அவ்வுருவினை யாம் எந்தச் சொற்பொருள் கொண்டு எடுத்துக் கூறவல்லேம்? இருவருக்கும் பொருந்துமாறு பொதுப்பட "எந்தாய்" என (எம் தந்தையே; எம்முடைய தாயே என இருவகைப் பொருளும் அமையுமாறு) ஒரு சொல்லையே அமைத்துப் பாடி விடுவோம் என நயமுற நவிலுகின்றார் அவர்.

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும்,
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு ஒன்றேஉளது!
அவ்வுரு வினைமற்று
எவ்வாச் சியம்என்று எடுத்திசைப்பேம்?
இன்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவு அல்குல்
எந்தாய் என்று பாடுதுமே"

## தத்துவ நுண்பொருள்:

ஆணும் பெண்ணும் தம்முள் அயன்மை இன்றி, அன்பினால் ஒருவருக்கொருவர் ஒன்றித் தொடர்பு கொள்ளும் அரிய இனிய நெறியின் சிறப்பினை, இந்திய மக்கள் தெளிவுறத் தெரிந்திருந்த தன்மையினை அர்த்தநாரீசுவரத் திருவுருவம் புலப்படுத்துகின்றது. ஓர் ஆணோ பெண்ணோ தனியே இருக்கும் அளவும் நிறை நிலை பெறுவதில்லை. இருவரும் ஒன்று சேரும் பொழுதுதான், அவர்கள் முழு நிறைவை அடைகின்றனர், ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராக, வாழ்க்கையில் உற்றுழியுதவிக் கொள்ளும் உயிர்த்துணைவர்களாக, ஆணும் பெண்ணும் அன்பினாற் பிரிவற ஒற்றுமைப்பட்டு உலகில் வாழ்தல் வேண்டும்; கணவனும் மனைவியும் தம்முள் மிகச் சிறந்த நண்பர்களைப்

போன்று திகழத்தக்கவர்கள் ஆவர். 'கணவன் மனைவி' என்னும் தொடர் பினும் சிறந்த புனிதம் மிக்க தொடர்பு பிறிதெதுவும் உலகத்தில் இல்லை. மனித வாழ்வின் விருப்பங்கள் அனைத்தும் அத் தொடர்பாற் புனிதமும் நிறைவும் பெறு கின்றன. உலக வாழ்வு என்பதே அது தான்! இத்தகைய பற்பல சிறந்த தத்து வங்களையெல்லாம் நம்மனோர்க்கு நன் கினிது உணர்த்துவதே, அர்த்தநாரீசுவரத் திருவுருவமாகும். இவ்வுலகத்திற் சிறந்த கணவன் மனைவியராகத் திகழ்ந்து, இல் லறத்தை நல்லறமாக ஆற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ விரும்புவோர் அனை வரும், அர்த்தநாரீசுவரப் பெருமானை வழி பட்டு உய்ய முயலுதல் வேண்டும்!*

முடிவுரை:

இத்தெய்வத் திருவுருவினையே, ஆசிரி யர் திருவள்ளுவர் **ஆதிபகவன்** என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளார், எனவும் கூறலாம். வேதத்துக்குப் பலரும் பல பொருள் கூறுவர், கொள்வர். அம்முறை யில் தமிழ் வேதமாகிய திருக்குறளுக்கும் நாம் பலவகையில் பொருள் கொள்ள வாய்ப்புண்டு. ஆதிபகவன் என்னும் தொடர், ஆதி சத்தியோடு கூடிய பகவ னுகிய **சிவபிரான்** எனவும்; ஆதிலட்சுமி யோடு கூடிய பகவனுகிய **திருமால்** என வும்; பொருள் செய்யத் தக்க வகையில் விளங்குகின்றது. **திருமால்** என்னும் சொல்லுக்குத் திருவோடு கூடிய மால் (இலட்சுமி நாராயணன்) எனப் பொருள் கொள்வது மரபு. இவ்வாற்ருல் **ஆதிபக வன்** என்னும் தொடர் உலகியல் நெறிக் கும் அருளியல் நெறிக்கும் ஏற்றதொன் ருய், சைவம் - வைணவம் என்னும் இரு சமயத்திற்கும் பொதுமை உணர்வுடைய தாய் அமைந்துள்ளமை அறிந்தின்புறத் தக்கது.

வாழிய திருவள்ளுவர்!
வாழ்க திருக்குறள் !

—ஆசிரியர்

*"Siva is **Ardhanariswara**, and his imag signifies the Co-operative interdependent, separately incomplete but jointly complete masculine and feminine functions of the supreme being. There is nothing unwhole_ some or guilty about the sex life... The image of **Ardhanariswara** is India's recognition of the mutual relationship of man and woman, the husband and the wife..."

**—Dr. S. Radhakrishnan.**

## கோயில் நிகழ்ச்சிகள்

**ரம்மோத்ஸவ விழா**

கைச்சினம் : ஸ்ரீ வெள்வளைநாயகி சமேத ஸ்ரீ கைச்சினேஸ்வரப் பெருமாள் தேவஸ்தானம்.

திருஇடும்பாவனம் : ஸ்ரீ சத்குணநாதர் தேவஸ்தானம்.

ராஜமன்னார்குடி : ஸ்ரீ சொக்கநாதர் மீனுட்சியம்மன் திருக்கோயில்.

சிறுவாச்சூர் : ஸ்ரீ மதுரகாளியம்மன் கோயில்.

அழகர்கோயில் : ஸ்ரீ கள்ளழகர், ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில்.

காஞ்சிபுரம் : ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

# 'இன்ப வாழ்வின் இயல்'

**முன்னுரை:**

'இன்பம் என்பது எல்லா உயிர்க்கும்' தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்' என்பது தொல்காப்பிய நூற்பா. அதற்கு ஏற்ப, இவ்வுலகத்துள்ள எல்லாஉயிர்களும் இன்பத்தையே தேடி அலைதலைக் காண்கின்றோம்.

'வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை' என நாலடியார் கூறுவது போல, தாம் வளம்பல பெற்று வாழ்தலைவிரும்பாதவர்கள் இவ்வுலகத்தில் ஒருவரும் இலர். இங்ஙனம் எல்லோருமே இன்ப வாழ்வு வாழ்தலில் வேட்கை யுடையவராக விளங்கினும், ஒரு சிலர்க்கே அஃது ஒரோவழி கைகூடுகின்றது.

ஒருமனிதன் எப்படி யெல்லாம் இவ்வுலகில் வாழத் தலைப்பட்டால், தக்கவாறு முறைப்படி நடந்து கொண்டால், இன்பம் பெறுதல் இயலும் என்பதனைக் குறித்துப் பெரியோர்கள் பலர், தத்தம் நூல்களிலும் கவிதைகளிலும் விளக்கிச் சென்றுள்ளனர். அவர்களிலே ஒருவர் கூறிப் போந்த பின்வரும் கருத்துக்கள் நாம் நன்கு சிந்தித்து உணர்தற்கு உரியன.

**கருத்துரை:**

"எவன் ஒருவன் பிறருடைய விருப்பத்திற்கே பணிந்து நடத்தற்குப் பிறக்கவும் அல்லது கட்டாயப்படுத்தப்படவும் இல்லையோ,

எவனுக்குத் தன் தூய சிந்தனையே கவசமாகவும், ஆரவாரமற்ற இயல்பான உண்மைப் போக்கே உயரிய திறமையாகவும் அமைகின்றதோ,

எவனுடைய உள்ளம் இறப்பிற்காகச் சிறிதும் அஞ்சித் தயங்காமல், எப்பொழுதும் அதனை இனிது வரவேற்கும் முறையில் சமைவு பெற்று நிற்கிறதோ,

எவன் இன்ப நுகர்ச்சிகளினாற் கிளர்ச்சியுற்றும், துன்ப நுகர்ச்சிகளினால் தளர்ச்சியுற்றும், பந்த பாசங்களினாற் கட்டுண்ணப் படாமல் கவலை யின்றி விளங்குகின்றானோ,

எவனுடைய வாழ்க்கை பிறரெவரும் குறை கூறி இகழ்தற்கு இடந்தராமல் மாசுமறுவற்றுப் பொலிகின்றதோ,

எவனுக்குத் தன்னுடைய தூய மனச்சான்றே வலிமை மிகுந்த அரணாக அமைந்துள்ளதோ,

எவனுடைய உயரிய நிலை இச்சகம் பேசும் போலி முகமனாளர்களுக்கு ஆதரவு தர இல்லையோ, எவனுடைய தளர்வு குறைகூறி நிந்தித்தே திரிபவர்களைப் பெரியவர்களாக ஆக்கவில்லையோ,

எவன் தற்செயலாகவோ தவறான வழிகளினாலோ பெருநிலை எய்திவிட்ட எவரையும் குறித்துப் பொறாமைப்பட வில்லையோ,

எவன் புகழுரைகளால் விளையும் ஆழமான படுகாயங்களையும் அறிந்துகொள்ளப் பெறவில்லையோ,

---

How happy is he born or taught
  That serveth not another's will
Whose armour is his honest thought
  And simple truth his highest skill!

Whose passions not his maters are
  Whose soul is still prepared for death;
Untied unto the world with care
  Of princely love or vulgar breath;

Who hath his life from rumours freed,
  Whose conscience is his strong retreat
Whose state can neither flatterers feed,
  Nor ruin make accusers great;

எவன் அரசின் சட்டங்களையே யன்றி, நல்லொழுக்க விதிகளையும் நன்கறிந்திருக்கின்றானோ,

எவன் காலை மாலை வேளைகளில வரங்கள்பெறுவதற்காக அன்றி அருள் நலனையே நினைந்து வியந்து இறைவனை இறைஞ்சித் தொழுகின்றானோ,

எவன் தீங்கு எதுவும் இல்லாத நெறியில் தன்னுடைய நாட்களை ஆய்ந்து தேர்ந்தெடுத்த நல்ல நூல் அல்லது நண்பனுடன் சேர்ந்து பயனுறக் கழிக்கின்றானோ,

அந்த மனிதன்தான், தன் ஆக்கம் குறித்தஅவா அல்லது தன் வீழ்ச்சி பற்றிய அச்சம் ஆகிய அடிமைத் தளைகளில் இருந்து விடுபட்டுச் சிறந்து விளங்குகின்றான்! நாடுகளுக்கு அல்லாவிடினும், அவனுக்கு அவனே அரசனாக அமைகின்றான். அவனிடம் யாதொரு பொருளும் இல்லாதொழியினும், அவனே எல்லாச் செல்வ வளங்களும் பெற்றுத் திகழ்கின்றான்!

## முடிவுரை :

இங்ஙனம் சிறந்த பல கருத்துக்கள் அமையக் கவிஞர் ஒருவர் பாடுகின்றார். உரிமை, நேர்மை, உண்மை, உணர்ச்சி நலன், பற்றின்மை, கவலையின்மை, பழியின்மை, மனச்சான்றுடைமை, நடுவு நிலைமை, அழுக்காறின்மை, புகழ் விரும்பாமை, நல்லொழுக்கமுடைமை, இறை வழிபாடு, நல்ல கல்வி, சிறந்தநட்பு ஆகிய பல உயரிய பண்புகளின் இன்றியமையாமையினைக் குறிப்பிட்டு, இன்ப வாழ்வுக்கு அவைகளே துணைசெய்ய வல்லனவாதலை, அக்கவிஞர் தம்முடைய அழகிய கவிதையின் வாயிலாக அறிவுறுத்துகின்றார்.

இச்சிறந்த கருத்துக்களை இனிது உணர்ந்துகொண்டு, ஓரளவேனும் நடக்க முயன்று, நாம் நலம்பெற முயலுவோமாக!

- ஆசிரியர்

---

Who envieth none whom chance doth raise
  Or vice; who never understood
How deepest wounds are given with praise;,
  Nor rules of state, but rules of good;

Who God doth late and early pray
  More of his grace than gifts to lend;
Who entertains the harmless day
  With a well-chosen book or friend;

This man is free from servile bonds
  Of hope to rise, or fear to fall;
Lord of himself, though not of lands;
  And having nothing, he hath all.

*- Sir Henry Wotton,*

*The Character of a Happy Life.*

# மதிப்புரை

தமிழிலுள்ள இலக்கிய வகைகளுள், தல புராணங்கள் என்பன ஒரு பகுதியாகும். தல புராணங்களுள் இலக்கியச் சிறப்பும் வளமும் நிறைந்த நூல்கள் மிகப் பல உள்ளன. என்றாலும், அவைகளுள் தலையாய பெருஞ் சிறப்புடையவை என ஒரு சில நூல்களே அறிஞர்களால் மதிக்கப்பெறுவன. அத்தகைய ஒரு சில பெருஞ் சிறப்புடைய தல புராணங்களுள் ஒன்றாகப் பெருமையுற்றுப் பிறங்குவது "தணிகைப் புராணம்" ஆகும்.

இதனைப் பாடியருளியவர் கச்சியப்ப முனிவர் என்பவர் ஆவர். இவரைக் கவிராட்சசர் எனக் கற்றுவல்ல புலவர் பெருமக்கள் பலரும் பாராட்டிப் புகழ்ந்துரைப்பர். இவர் சைவ சித்தாந்த விளக்கவுரைப் பேராசிரியராக விளங்கி யிருந்த ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் அவர்களின் அரும்பெறல் மாணவராவர். திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம், காஞ்சிப் புராணத்தின் இரண்டாம் காண்டம் ஆகிய வேறு பல பெரும் நூல்களையும் இவர் பாடியுள்ளார்.

தல புராணங்கள் இயற்றிய கவிஞர்கள் பலருள்ளும் தலைசிறந்த ஒருவராக விளங்குபவர், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களாவர். ஏறத்தாழ 22 தலங்களுக்கு அவர் புராணங்கள் பாடியுள்ளார். அம் மாபெரும் கவிஞரே, தமக்கு உபாசனை குருவாகக் கொண்டு கச்சியப்ப முனிவரை வழிபட்டு வந்தார் தாம் கவிதை இயற்றுங்கால் எப்பொழுதேனும் கருத்துத் தடையும் வறட்சியும் ஏற்படுமாயின், அப்பொழுதெல்லாம், கச்சியப்ப முனிவரையே மன ஒருமையுடன், சிந்தித்துத் தியானிப்பார் அவ்வளவில் அவர்க்கு உடனே கருத்துத் தடையும் வறட்சியும் நீங்கி, கவிதையும் கருத்தும் வெள்ளம்போல் தங்கு தடையின்றிப் பொங்கி வரும் என. டாக்டர் திரு உ. வே. சாமிநாதையர் அவர்கள், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இதனால், கச்சியப்ப முனிவரின் சிறந்த கல்விப் புலமையும், தெய்வ அருள் நலனும் எத்தகையவை என்று நாம் எளிதில் உணரலாம்.

கச்சியப்ப முனிவரின் நூல்கள் பலவற்றுள்ளும் பெரிதும் கலை நலம் சிறந்தது; புலமையின் பெருஞ் சிகரம் எனப் பிறங்குவது; கவிதை நலம் கனிந்தது; சமயக் கருத்துக்கள் நிறைந்தது; தத்துவ நுண் பொருள்கள் செறிந்தது; இயற்கைப் புனைவுகளாலும், இனிய உவமைகளினாலும் சைவ சித்தாந்த உண்மைகளை ஆங்காங்கே அழகுற விளக்கிச் செல்லுவது; சங்க நூல்களின் நடை நலம் சான்றது; கற்பனை வளம் சிறந்து பொலிவது. இலக்கண, இலக்கியப் பெரும் புதையல் எனத் திகழ்வது தணிகைப் புராணம்.

இத்துணைச் சிறந்த "தணிகைப் புராணம்" என்னும் இணையற்ற இவ் இலக்கியப் பெரு நூலினை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், மிகவும் பெரு முயற்சி மேற்கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராக விளங்கி யிருந்தவரும், இலக்கணப் புலமையிற் சிறந்தவரும், தூய சிறந்த துறவியாக வாழ்ந்தவரும், பெரும் புலவருமாகிய அருட்டிரு கந்தசாமியார் அவர்கள் எழுதிய சிறந்த உரையுடன், அவரால் எழுதப் பெறாமல் விடப்பெற்று எஞ்சிய பகுதிகளுக்குத் திரு. செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமிப் பிள்ளை, பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனார் என்னும் இரண்டு அறிஞர் பெருமக்களைக் கொண்டு சிறப்புற எழுதுவித்து, இரண்டு பகுதிகளாக வனப்புற வெளியிட்டுள்ளனர்.

தமிழ் நூல்களையும், சைவ நூல்களையும் மிக நல்ல முறையில் வெளியிடுவதில் தனிச் சிறப்புடைய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின், இச் சிறந்த தொண்டு பெரிதும் போற்றிப் பாராட்டுதற்குரியது. தமிழிலும், கவிதையிலும் சமயத்திலும், சிறப்பாக முருகனிடத்திலும் அன்பும் ஆர்வமும் உடைய அனைவரும் வாங்கி வைத்துப் படித்துப் போற்றிப் பயன்பெற வேண்டிய சிறந்த நூல் இது.

கிடைக்குமிடம் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1-140 பிராட்வே, சென்னை-1.

விலை : 2 பாகங்களும் சேர்ந்து ரூபா 25/-

—ஆசிரியர்.

# திருப்பாவையின் உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி

**கனைத்திளங்கன்று—பொய்கையாழ்வார்**

*கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி*
*நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர*
*நனைத்தில்லம்சேறுக்கும் நற்செல்வன்தங்காய்*
*பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றிச்*
*சினத்தினல் தென்னிலங்கைக்கோமானைச் செற்ற*
*மனத்துக்கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்*
*இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்*
*அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோரெம்பாவாய்.*

பூதத்தாழ்வாருக்கு அடுத்து முந்தினவரான பொய்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. **தங்காய்!** என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும், உலகில் தங்கையென்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் தமக்கையென்று மூதேவியையும், வழங்குவர்கள். 'சேட்டை தம்மடி யகத்து' என்ற திருமாலைப் பாசுரத்தில், தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் மூதேவியைக் குறித்தமை காண்க. ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரை மலரிற் பிறந்தவள். 'வனச மலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே' என்கிறபடியே பொய்கை யாழ்வாரும் த்ாமரைப் பூவில் தோன்றியவர். இந்த வொற்றுமை நயம்பற்றித் தங்காய்! என விளிக்கத் தகுதியுடையார் இவ்வாழ்வார். "நனைத்தில்லஞ் சேறுக்கும்" என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளா நின்ற பெருமானை நோக்கி பரத்வாஜ மஹர்ஷி "பங்க திக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார். இங்கு பரதாழ்வான் சேறு பூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்து யாது? இரவும் பகலும் நிச்சலும் அழுதழுது நனைத்தில்லம் சேறுக்கினன் என்பர். "வண்பொன்னிப் பேராறு போல் வருங் கண்ண நீர்கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்" என்றார் குலசேகரப் பெருமாளும், அவ்வண்ணமாகவே பொய்கை யாழ்வாரும் "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்று தாமே பேசினபடியே அழுதவராதலால் நனைத்தில்லஞ் சேறுக்கின ரென்க. அன்றியும் இவரது இல்லமான பொய்கை சேறுகவேயுளது. இதை நாளைக்கும் ப்ரத்யக்ஷமாகக் காணலாம்.

[கனைத்து] முதன் முதலாகப் பேசத் தொடங்கும் போது கனைப்பது இயல்பு. பொய்கையார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவரென்பது இவ்வினையெச்சத்தினல் தோற்றுவிக்கப்படும். அங்கியான நம்மாழ்வார்க்கு அங்கமான விவர் கனைத்தபடி. [இளங்கற்றெருமை] எருமை யென்றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணாக்ரமத்தால் தேவ தேவ திவ்ய மஹிஷி என்றவாறு. எம்பெருமானுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியொப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை - எதனலே என்றால்: அவளைப் போல இவனும் தாமரை மலரிற் பிறந்ததனல். "இளங் கன்று களையுடைய" என்று விசேஷணமிட்டதனல், மற்றை யாழ்வார்களனைவரும் இவர்க்கு வத்ஸ ஸ்தாநீயர்களாய் இவர் மாத்ரு ஸ்தாநீயர் என்று காட்டினபடி. ஆழ்வார்களுள் முதல் வரிறேயிவர். [கன்றுக்கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தியருளிச் செய்யத் தொடங்கினது கன்றுகளான நம்போல்வார் பக்கலிலுள்ள பரம க்ருபையாலென்கை. "வையத்தடியவர்கள் வாழ" என்றன்றோ இவருடைய திவ்யப் பிரபந்தத்திற்குத் தனியன் தோன்றியது.

[நினைத்து முலைவழியே நின்று பால்சோர] பகவத் குணங்களை நினைத்தவாறே அந்த நினைவு தானே ஊற்றுகப் பால் போன்ற ஸ்ரீஸூக்திகள்

பெருகப் புக்கன என்றபடி. [பனித்தலைவீழ நின்வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால் இவரது வாசற்கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலை வீழ ப்ராப்தமே யாகுமிறே. முதலாழ்வார்கள் மூவரும் பனித்தலை வீழத் திருக்கோவலூர் வாசற்கடை பற்றின கதையும் நன்கு ஸூசிதமாகிறது. [சினத்தினு லித்யாதி] இது ஸ்ரீராம குணகீர்த்தனம். மஹர்ஷிகளின் ஞானக் கண்ணுக்கும் இலக்காகாத வொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத் தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண்முடியைப், பாதமத்தா லெண்ணினன் பண்பு." என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையில் விரிவு காண்க. அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!" என்றதற்குப் பொருந்த "மனத்துக் கினியானை" என்றது. [இனித்தானெழுந்திராய்] "பழுதே பல பகலும் போயினவென்றஞ்சி யழுதேன்" என்கிற பாசுரம் பேசினபிறகுங்கூட உறங்கலாமோ? என்கை. முமுக்ஷுப்படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை' என்ற ஸ்ரீஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வார் பாசுரம் இங்கு நினைவுக்குவராம லிருக்குமோ?

இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முந்தின ஆழ்வார்களை யெல்லாம் உணர்த்தியாயிற்று. 'ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றுமுள்ள ஸம்ப்ரதாயப் படிக்கு ஸ்ரீமதுர கவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்ந்தவர்களாதலால் இவ்விருவரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக் கிடக்கின்றது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங்கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவரே! என்றபடியாகும். இங்கு நற்செல்வ னென்பது நம்மாழ்வாரை, அவர் திருவாய்மொழி அருளிச் செய்கையில் மதுரகவிகள் அவருடைய கையின் ஸ்தானீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இந்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானாரைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்ற ஞானத் திருப்பாவை பாடியபாவை தங்கை" என்றும், 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று முள்ளவை காண்க. ஆண்டாள் தன்னைத் தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோவென்று விரஸமாக வினவுவார்க்கு நாம் விடையளிக்க வல்லோமல்லோம், சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போருகிறோ மத்தனை,

## புள்ளின்வாய்—தொண்டரடிப் பொடியாழ்வார்

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று
புள்ளுஞ்சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்

இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரப்பொடியாழ்வாரை யுணர்த்தும் பாசுரம். [போதரிக் கண்ணினாய்!] புஷ்பங்களை ஹரிப்பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்துபவரே! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரிறே இவ்வாழ்வார். "துளபத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரப்பொடி" "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரப்பொடி" என்றன்றோ இவர் சொல்லிற்று. பாவாய்! என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். கீழே எட்டாம் பாட்டில் பாவாய்! என்ற விடத்து விவரணம் காண்க. பதிவ்ரதா சிரோமணியைப் பாவையென்பது. இவ்வாழ்வார் அரங்கனொருவனுக்கே வாழ்க்கைப்பட்டு வேறொரு திருப்பதியெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவராதலால் இவரிடத்தில் கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையா னெதிரே ஒருவர் "பதின்மர் பாடும் பெருமாள்!" என்று ஏத்த, அதைக்கேட்ட பெரிய கேள்விஜீயர், 'சோழியன் கெடுத்தான் காணும்: அந்த ஏற்றம் எம்பெரு

மாளுக்கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்ருர் என்ற ஐதிஹ்யமும் இங்கு நினைக்கத்தக்கது. [சோழியர்-புரச்சூடரான தொண்டரடிப்பொடிகள்.

புள்ளின்வாய் கீண்டானையென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது. இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வள வெழுந்தவள மாட மதுரைமா நகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ண பிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளி யெழுச்சியில் 'மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா?' என்று இராமபிரானுடைய கீர்த்தியையும் பாடினமையுணர்க. அன்றியும், திருமாலையில் "சிலையினுலிலங்கைசெற்ற தேவனே தேவனுவான்—கற்றினம் மேய்த்தவெந்தை கழலிணை பணிமினீரே" என்று ஸ்ரீ ராமக்ருஷ்ணர்களிருவரையும் ஸமமாகப் பாடினதும் இப்பாட்டின் முதலிரண்டடிகளுக்கு இணங்கும்.

[பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்] தொண்டரப்பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் 'இரவியர்மணி நெடுந்தேரொடுமிவரோ' அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ என்னுமிரண்டு பாசுரங்களினுல் பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கபடியைப் பேசினவராதலால் அதை ப்ரத்யபிஜ்ஞாபனம் பண்ணுகிறபடி. [வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று] சுடரொளிபரந்தன சூழ்திசையெல்லாம் துன்னியதாரகை மின்னொளிசுருங்கிப், படரொளி பசுத்தனன் பனிமதியிவனே என்று வானச்சுடர்க்கதிகளைச் சொல்லியெழுப்பினவரும் இவ்வாழ்வாரே. [பள்ளிக்கிடத்தியோ] சயனப்பெருமாளொருவர் பக்கலிலே யிடுபட்டுக் கிடக்கிறீரென்கை. "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்று பலகாலும் பள்ளியைப் பேசிக் கொண்டு கிடக்கிறீரென்றுமாம்.

[நன்னுளால்] "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னுளால்" என்ற திருவாக்கிலேயே இச்சொல்லும் வருகின்றது. தொண்டரடிப்பொடிகள் திருவவதரித்தது மார்கழித் திங்களேயாதலால் நன்னுளென்னத் தட்டுண்டோ? [கள்ளந் தவிர்ந்து] சூதனுய்க் கள்வனுகி' என்றும் 'கள்ளமேகாதல் செய்து' 'கள்ளத்தேனுனுந் தொண்டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத்தைப் பேசிக் கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன்வட்டில் விஷயமான கள்ளம் அடிபட்டுக்கிடக்கிறது. அது தவிர்ந்து பகவத் பாகவத கோஷ்டியில் கலந்த படியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில்வாஸ முடையவராதலால் அவ்விடத்து அடையாளமாகப் [புள்ளும் சிலம்பினகாண்] என்பது இப்பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி] நீராட்டம் முதலிய நித்ய கர்மாநுஷ்டானங்களையும் தவிர்ந்து சில காலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரது சரிதையிற் காணத்தக்கது. குளித்து மூன்றனலையோம்புமித்யாதியுங் காண்க. ... (176)

## உங்கள் புழைக்கடை—திருப்பாணாழ்வார்

உங்கள் புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
கூம்பினகாண்
செங்கல்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்ருர்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணுதாய்! நாவுடை
யாய்
சங்கொடுசக்கரமேந்தும் தடக்கையன்
பங்கயக்கண்ணனைப் பாடேலோரெம்பாவாய்

தொண்டரடிப்பொடிகளுக்கு அடுத்தவரான திருப்பாணாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில் நங்காய்! நாணுதாய்! நாவுடையாய்! என்ற மூன்று விளிகளும் திருப்பாணாழ்வாரைத் திடப்படுத்துமவை எங்ஙனேயென்னில்; புருஷர்களில் சிறந்தவர்களை நம்பி என்றும், ஸ்த்ரீகளில் சிறந்தவர்களை நங்கை யென்றும் வழங்குவர். நம்பி—பூர்ணர்; நங்கை—பூர்ணை. குணபூர்த்தியுடைமை சொல்லப்படுகிறது. பக்தர்களுக்கிருக்க வேண்டிய குணங்களிற் சிறந்தது பாரதந்திரியம். மற்றையாழ்வார்களும் இக்குணவிசேஷத்தை நன்கறிந்தவர்களே யாயினும் இதை அனுட்டானத்தில் காட்டினவர் இத்திருப்பாணாழ்வாரொருவரேயாவர். இவர் தம்மிடத்துக் கொடிய அபசாரம் புரிந்த லோகஸாரங்க மகாமுனிகள் அரங்கேசனது கட்டளையினுல் ஓடிவந்து 'என் தோளின்மீது

ஏறிக்கொள்ளும்' என்ன; அங்ஙனம் செய்வது தம் இயல்வுக்குச் சிறிதும் தகாதென்று தெரிந்திருந்தும், அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தைநினைத்து அதற்கு உடன்பட்டதே இவ்வாழ்வார்க்குத் தனிச் சிறப்பான குணபூர்த்தியாம். [நாணுதாய்!] நாண்—அகங்காரம்; செருக்கு; அஃதில்லாதவர் இவ்வாழவார்; அந்தணர் தலைவரான அந்த லோகஸாரங்க முனியின் தோளின்மீது ஏறியிருக்கச் செய்தாலும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் 'அடியார்க்கு என்னை யாட்படுத்த விமலன்'' என்று சொல்லி, அவருடைய தோளின்மீதிருந்ததும் அவர்க்கு ஆட்பட்டபடியே யொழியத் தாம் பெருமைபெற்றபடியன்று என்று விளக்கினவராதலால் சிறிதும் செருக்குக் கொள்ளாதவர் [நாவுடையாய்!] நாக்கையுடையவர் என்பது பொருள் நாக்கு யார்க்கில்லை? எல்லார்க்குமுள்ளதே. *நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகள்* என்ற திருவாய்மொழியின்படியே ஞானக் கலைகள் மலரப் பெற்ற நாக்கையுடையவரே! என்றவாறு. ''பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளொன்று பரவுமின்கள். என்னும்படி ஸகலார்த்தங்களையும் பத்துபாட்டிலே யடக்கியருளிச் செய்யவல்லவரான இவரே நாவுடையர். ஆக விளிகள் மூன்றும் இவர்க்கே பொருந்துவனவாயின இனி பாட்டினடியே தொடங்கி இவ்வாழ்வார் தமக்கே ஒவ்வோரக்ஷரமும் பொருந்துமென்பதை விவரிக்கின்றேன்.

[உங்கள் புழைக்கடைத் தோட்டத்து] இவ்வாழ்வார் தமது சாதி நிலைமைக்கு ஏற்ப வாழ்ந்த விடத்தைத் தெரிவிக்கின்ற வாக்கியமிது. புழைக்கடைத் தோட்டத்தில் தானே இவர் வாழ்ந்தது [வாவி] கோயிலில் திருமஞ்சனக் காவேரியருகே இவர் வாழ்ந்தபடியால் அதைக் காட்டுகிறது வாவியென்று. வாவி—நீர்நிலை. [செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின] ஒருவாய் மலர, மற்றொருவாய் மூடினபடியைச் சொன்ன விதனால் இவரை அதிக்ஷேபித்த லோகஸாரங்க முனியின் வாய் அட்டஹாஸஞ்செய்து மலர, 'ஐயோ! அபசாரமாயிற்றே!' என்று வாயை மூடிக்கொண்டு இவர் உள்ளே பதறியோடிச் சென்ற கதையை ஸ்பஷ்டமாகக் காட்டினபடி. [செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்] காஷாயாம்பரதாரியான ஸந்ந்யாஸியைச் சொல்லுகிற வாக்கியமிது. திருப்பாவையில் ஸந்ந்யாஸிப்ரஸ்தாவம் இப்பாட்டில் தவிர வேறுபாட்டில் கிடையாது; ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார் தவிர வேறொருவர் கதையில் ஸந்ந்யாஸி ப்ரஸ்தாவம் கிடையாது. அடுத்த வாக்கியமும் காணீர் [தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்] லோகஸாரங்க முனியானவர் ஸ்ரீரங்க ஸன்னிதியைத் தம்முடையதேயாகவும். பாண் பெருமாள் அங்குப் புகத்தகாதவரென்றும் நினைத்திருந்த நினைவு தொலைந்து தங்கள் திருக்கோயிலிலே [சங்கிடுவான்] சங்கு - ஸங்கம்; பலரறியக் கொண்டு சேர்ப்பதற்காக [தோளிலே தூக்கிக்கொண்டு] போகின்றபடியைப் பாருங்களென்கை.

[எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும் நங்காய்] என்பதில் ஓர் அழகிய பொருள் தொனிக்கும், எழுப்புகையாவது எழச்செய்கை, தூக்கிக்கொள்ளுகை. எங்களை யென்றது பாகவதர்களை யென்றபடி. பாண்பெருமாளே உம்முடைய முதற் பாசுரத்தில் ''அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்'' என்ற சொல்நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத்தெரிகிறது. உமது கதையோ அப்படியில்லை. மஹாபாகவதர் தோளில் நீர்தாமேறி யிருந்ததாக வுள்ளது; வாய்பேசுமத்தனையேயோ? என்று விநோதமாகக் கேட்பது போலுள்ளதன்றோ. [சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனைப்பாட; பங்கயக்கண்ணானைப் பாட.] எம்பெருமான் சங்கசக்ரபாணியென்பதையும் திருக்கண்ணழகுடையானென்பதையும்பெரும்பாலும் ஆழ்வார்களெல்லாரும் பாடியிருந்தாலும், திருப்பாணாழ்வார் *கையினார் சுரிசங்கனலாழியர்* என்றும் *கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாயகண்கள் என்றும் பாடினமைக்கு ஏகதேசமேயாம் அவையெல்லாம். ... ... (177)

## எல்லேயிளங்கிளியே—
## திருமங்கையாழ்வார்

எல்லே! இளங்கிளியே! இன்னமுறங்குதியோ?
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்!
போதர்கின்றேன்
வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக

ஒல்லைநீபோதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும்போந்தாரோபோந்தார்
போந்தெண்ணிக்கொள்
வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்

திருப்பாணாழ்வார்க்கு அடுத்தவராய் ஸர்வஜ்ஞிஷ்டரான திருமங்கையாழ்வாரை யுணர்த்துகின்ற திப்பாசுரம். பரஸ்பர ஸம்பாஷணையாக வைத்துப் பாடின பாசுரம் இது: இங்ஙனே ஸம்பாஷணையாக வைத்துப் பாடினவர் திருமங்கையாழ்வார். பெரிய திருமொழியில் (11.5) மானமருமென்னேக்கிப் பதிகம் பூர்த்தியாக [நிகமனப் பாசுரமுட்பட] இருதோழிகளின் ஸம்பாஷணையாக வன்றோ அமைந்துள்ளது. இதுவொரு ஸாதாரணமான அடையாளமென்க. எல்லே இளங்கிளியே திருமங்கையாழ்வார் தம்மைக் கிளியாகச்சொல்லிக் கொண்ட விடங்கள் பல. கள்வன் கொற்பதிகத்தில் [தாய்ப்பாசுரமானதில்] அவன்பின் கெண்டையொண்கண் மிளிரக் கிளிபோல் மிழற்றி நடந்து என்றும், திருநெடுந்தாண்டகத்தில் மென்கிளி போல் மிக மிழற்றுமென் பேதையே என்றும் சொன்னவை காண்க. இதில் மிக்கதொரு விசேஷமுண்டு. "சொன்னதைச் சொல்லுமாங் கிளிப்பிள்ளை" என்ற வசனம் ப்ரஸித்தம். நம்மாழ்வார் சுருங்கச் சொன்னதை யெல்லாம் விரியச்சொல்லுங்கிளி — திருமங்கையாழ்வார். "பராங்குசமுனியும்—பரகாலகவியும்" என்றதொரு பெரிய வியாஸத்திலே இதை மிக விரித்துள்ளேனாதலால் அங்குக் கண்டுகொள்வது, [ஸ்ரீராமாநுஜன் நெ. 197] [இன்னமுறங்குதியோ?] பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே என்று பாகவதகோஷ்டி ஸம்ச்லேஷத்தையே பெரும்பேறாக வெளியிட்டநீர் இத்திரளில் அந்வயியாதே இன்னமும் உறங்கலாமோ? என்றார்கள். (அதற்குத் திருமங்கையாழ்வாருடைய விடை.)

சில்லென்றழையேன்மின் நங்கைமீர்: கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் உறக்கமுந்தானில்லை என்று தாய்ப்பாசுரத்தாலும், ஓரிரவுமுறங்கேன் உறங்காதிருப்பேன் என்று மகள் பாசுரத்தாலும்ஒருகணப்பொழுதும் உறக்கமின்மையை வெளியிட்டுக்கொண்ட நம்மை "இன்ன முறங்குதியோ? என்பதே! என்று வெறுப்புக்கொண்டு "நான் வெறுக்கும்படி பேசாதீர்கள்' என்றார். இந்த வார்த்தையில் தோழிமீர் என்னாதே நங்கைமீர் என்று பெரியவார்த்தை சொன்னதனால் வெறுப்புக் கொண்ட கோதை [வல்லை, உன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்] என்றாள். திருமங்கையாழ்வாரே! நீர் மிக வல்லீரென்பதை நீர் அவதரிப்பதற்கு முன்பே நானறிந்தவள் காணும். [வல்லை] ஆசுகவி, சித்ரகவி, மதுரகவி, விஸ்தாரகவி என்னும் நால்வகைக் கவிகளும் பாடி சதுஷ்கவிப்ரதானரென்று விருதுபெற்றீர். [உன்கட்டுரைகள் வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே என்று இத்தனை கடுமையாகச் சொன்னதை நினைப்பது. பெரிய திருமொழி 4-9-4 இங்கே நம்முடைய திவ்யார்த்ததீபிகை காண்மின்; "[வாழ்ந்தேபோம் நீரே]உம்முடைய உடம்புஉம்மையாசைப்பட்டவர் களுக்காக ஏற்பட்டதென்று நினைத்திருந்தோம்; அப்படியன்றாகில் உம்முடம்பை நீரே கண்டு கொண்டு நீரே தொட்டுக்கொண்டு நீரே மோந்து கொண்டு நீரே வாழ்ந்துபோம்."

இப்படி கோதை கூறினதற்குக் கலியன் விடுத்த விடை [வல்லீர்கள் நீங்களே] கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே (நாச்சியார் திருமொழி 13-8) என்று அஸதஸ்யமாகக் கூறின உன்வார்த்தை வன்மையுடைத்தா? என்வார்த்தை வன்மையுடைத்தா? என்பதை உலகமறியாதா? என்றவாறு. இங்ஙனம் சொன்னவுடனே தாமே தம்முடையஇயல்வை நினைத்தார். மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்துங்கற்று - நான் உற்றதும் உன்னடியார்க்கடிமை என்று கூறின நாம் இங்ஙனே ஸ்பர்த்தித்துக் கூறலாகாதென்று துணிந்து [நானே தானயிடுக] என்றார். உங்களோடேகிலாய்த்து வார்த்தை சொல்லுகை ஸ்வரூபத்திற்குச் சேராது என்று அநுஸந்தித்தவாறு. நம்மாழ்வார் முதலானாரும் பாகவதசேஷத்வத்தை யருளிச்செய்திருந்தாலும் அவர்கள் "இது திருமந்திரத்தில் ஸித்திக்கிற பொருள்" என்று தெரிவிக்கவில்லை. திருமங்கையாழ்வாரொருவரே 'நின்திருவெட்டெழுத்துங் கற்று நான் உற்றது உன்னடியார்க்கடிமை'! என்றருளிச் செய்தவராதலால் இதில் இவர்க்குள்ள சிறப்பு அறியத்தக்கது.

உனக்கென்ன வேறுடையை இது திருமங்கையாழ்வாரை நோக்கிக் கோதை கூறுவது. சிறிய

திருமடலும் பெரிய திருமடலுமாக இரண்டு திவ்வியப் பிரபந்தங்களை யருளிச்செய்து "பெருந்தெருவே ஊராரிகழிலும் மடலூராதொழியேன்நான்" என்று எம்பெருமானை அச்சமுறுத்திக் காரியங் கொள்ளப்பார்த்தது இவ்வாழ்வார்க்கு அஸாதாரணமாதலால் இதையிட்டே உனக்கென்ன வேறுடைமை என்கிறது. நம்மாழ்வார் மாசறுசோதியில் "குதிரியாய் மடலூர்துமே" என்றும் "யாம் மடலூர்ந்தும்" என்றும் இரண்டு துண்டுப் பேச்சுகள் பேசினரத்தனை. இவ்வாழ்வார் அதைப் பிரபலப்படுத்தினவரென்பதுஅறியத்தக்கது. [எல்லாரும் போந்தாரோ போந்தார்] இவ்வாழ்வாரொருவர் தவிர மற்றையாழ்வார்களனைவரும் முன்னமே அவதரித்தாயிற்று என்று ஸ்பஷ்டமாகக் காட்டினபடி.

[வல்லானை கொன்ருனை] கண்ணபிரான் குவலயாபீட மதயானையைக் கொன்ற சரிதையைப் பாடுவதில் இவ்வாழ்வார்க்கு மிகுந்த வுத்ஸாகம் "பவளவாயாளென்மடந்தை பார்த்தன்பள்ளி பாடுவாளே" என்று [பரகாலநாயகி] பாடுகிறபடியைக் கூறுகின்ற திருத்தாயார் "கவளயானை கொம்பொசித்த கண்ணனென்னும்" என்று வல்லானை கொன்ற கதையைப் பாடுகிற படியையே பகர்ந்தாள். [மாற்றுரை மாற்றழிக்க வல்லான்] இது திருமங்கையாழ்வாருடைய வீரத்தைக் காட்டுகின்றது. "அங்கமலத் தடவயல்சூழாலி நாடன்" என்கிற காழிச்சீராம விண்ணகர நிகமனப் பாசுரத்தில் "அரட்டமுக்கி - அடையார் - சீயம் -கொற்றவேற் பரகாலன்" என்றருளிச் செய்துள்ள திருநாமங்களை விவரித்தபடி. [மாயன்] கண்ணபிரானுடைய மாயச் செயல்களுக்குக் குறைந்தனவல்லவே திருமங்கையாழ்வாருடையவை. நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தோலாவழக்கன், தாளூதுவான் முதலானுரைத் துணைகொண்டு இவ்வாழ்வார் செய்த மாயச் செயல்கள் ப்ரஸித்தமேயன்ருே. பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஜிதபாக்ய ஜிநாதிமணிப்ரதிமாஅபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணிமண்டபவப்ரகணும் விததே பரகாலகவி; என்கிற ச்லோகரத்னத்திஞல் அநுஸந்தித்த மாயச்செயல்களைச் சிந்திப்பது. (178)

---

1965ஆம் ஆண்டில், **அறநிலைய ஆணையர்** அவர்களால்,

துப்புரவுச் சூழ்நிலைச் சிறப்புக் குறித்துத் தெரிந்தெடுக்கப்பெற்றுள்ள

## கோயில்களின் பட்டியல்

1. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில், சென்னிமலை, ஈரோடு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் கோயில், திருக்கடவூர், மாயூரம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்
3. ஸ்ரீ கைலாசநாத சுவாமி மற்றும் நித்ய கல்யாணி அம்மன் கோயில், இளையாத்தகுடி திருப்புத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.
4. ஸ்ரீ மல்லிகேஸ்வரர் தேவஸ்தானம், லிங்கி செட்டி தெரு, சென்னை—1.
5. ஸ்ரீ வில்வநாத சுவாமி கோயில், திருவலம், குடியாத்தம் வட்டம், வடஆற்காடு மாவட்டம்
6. ஸ்ரீ தில்லையம்மன் கோயில், சிதம்பரம் நகர், சிதம்பரம் வட்டம், தென்னாற்காடு மாவட்டம்
7. ஸ்ரீ குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி கோயில், அம்மாபேட்டை, சேலம்.
8. அங்காளம்மன் கோயில், ஈரோடு நகர். ஈரோடு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.
9. ஸ்ரீ நவநீத கிருஷ்ண சுவாமி கோயில், ஒன்பத்துவேலி, பாபவிநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

கொங்குப் பிராட்டியார் தம் முயற்சியால் தம் பர்த்தாவையும் உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தார். அவள் வேண்டுகோளுக் கிணங்கி உடையவர் அவ்வூரிலேயே சிலநாள் தங்கினர். அப்போது மீண்டும் தண்டகாஷாயாதிகளை ஸம்பாதித்து தம்முடைய திருவாராதனமாகிய பேரருளாளன் ஸன்னிதியிலே ஸமர்ப்பித்து அவர் கிருபை பெற்று அவற்றை மீண்டும் தரித்தருளினர்.

ஆழ்வானும் பெரிய நம்பிகளும் என்னவானார்கள் என்ற கவலை, உடையவர்உள்ளத்தை வாட்டிக் கொண்டே யிருந்தது. பிராட்டியை உன்னிப் பெருமாள் தூதனுப்பி விவரம் தேடியதுபோன்று, உடையவரும் மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான் என்ற அடியவரைக் கோயில் சென்று ஆழ்வான் நம்பிகள் செய்திகளை அறிந்துவருமாறு அனுப்பினர். மாருதிச்சிறியாண்டானோடு அம்மங்கியம்மாளும் சென்றாள்.

மறுநாள் காலை உடையவர் திருவுள்ளம் என்ன புண் பட்டதோ அறியோம். வேதப்ரதிபாத்யனாய், தானொன்றே பரமாய் நிற்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை உதாசினம் செய்து பூமி காவலரும் செயல்படுகின்றனரே என்று ஏக்குற்றார் உடையவர். ஸவித்ரு மண்டல மத்யவர்த்தியான ஸ்ரீமந் நாராயணனே நிலவுஞ் சுடர் சூழ் ஒளி மூர்த்தியாய் திருவேங்கடமா மலையிலே குன்றிடைப் பரிதியாய் ஒளிவிட்டு நிற்கின்றமையின் அப்பெருமானைத் தியானித்து இருகையிலும் நீரை அள்ளி அர்க்கியப் பிரதானம் பண்ணினர். உத்தமமான ப்ரம்மவித்துக்கள் கையினல் விடும் அர்க்கிய ஜலம் ஆதித்தியனுக்குதவியாய் மந்தேஹரைத் தகிக்குமாபோலே, உடையவர் வார்த்த அர்க்கியமும் திருவேங்கடமுடையானைச் செயல்படுத்திற்று.

சோழன் இரவில் படுத்தவன் நடுநிசியில் அலறிப் புடைத்து எழுந்தான். அவன் கழுத்தெல்லாம் ஒரே புண்மயம். "என்னை வேங்கடத்தான் குத்தினன் வேங்கடத்தான் குத்தினன்" என்று அலறினன். விஷயமென்ன என மந்திரிப்பிரதானியர் சாவதானமாகக் கேட்க, "திருவரங்கம் பெரிய கோயில் என்று ஒன்று இருப்பதால்தானே தன் பொய்ச் சமயம் வலைசாய நேரிடுகிறது. அதனையே அலைத்து விடவேண்டும் என்று நேற்றிரவு என் மனத்தே எண்ணினேன். உடனே என்முன்னே நீல நிறமாக விண்ணளவுயர்ந்த திருமேனியோடும் கையில் ஒரு குத்துவாளுடனும் ஒருபுருடன் நின்றான். ஆர் நீ என்று அலறிக்கேட்டேன். "நம்மையறியாயா நீ! தீவாய் வாளிமழை பொழியுமவனாய் திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்தானே நாம் என்றான்!". நான் பதறி விழுந்தேன். எழுந்தேன். என் கழுத்தில் இவ்விரணங்களைக் கண்டேன். வந்த புருடனைக் காணேம். எப்படி என் பள்ளியறைக்குள் வந்தான். எப்படிப் போனன் என்பதும் அறியேன்" என்று புலம்பினன். பின்னர் அப்புண்களே வ்ரணமாய் அவற்றில் புழு நெளியத் துடித்துச் சிலநாள் கிடந்து மறைந்தான்.

பின்னர் உடையவர் கொங்குப் பிராட்டியின் ஊரில் நின்றும் பயணமாய்க் கோவை போய்ச் சேர்ந்தார். அவ்வூராருடைய வேதபாஹ்யராய் தேவதாந்தரபஜனம் செய்பவராயிருந்ததைக் கண்டார் உடையவர். உடையவர் முதலியாண்டானை அழைத்து "ஆண்டானே, இப்படி ஊரடங்கப் புறம்பே போக ஒண்ணுமோ. நீர் போய் இவ்வூரார் குடிநீரெடுக்கும் ஏரியில் உமது பாதங்களைத் தோய்த்துவாரும் என்று பணித்தார். ஆண்டானும் அப்படியே செய்து வந்தார். உடையவர் சம்பந்தியான ஆண்டானின் திருவடித்தோய்வாலே ஊரடங்கலும் ஸ்ரீபாத தீர்த்தமாய் அந்

நீரைப் பருகின ஊராரனைவரும் (அதுவரை உடையவர்பால் உதாசினமாக இருந்தவர்) நேரேவந்து உடையவர் திருவடிகளிலே விழுந்து வணங்கித் தங்கள் அகங்காரமும் குத்ருஷ்டியும் மாய்ந்து தங்கள் தவறுக்கு மன்னிப்புக்கோரி நின்றனர். உடையவரும் அவர்களைக் குளிரக் கடாக்ஷித்து அதுகாறும் அவர்கள் புறமபேசித் திரிந்தலைத் தமைக்கிரங்கி வடுக நம்பியை அழைத்து அங்கேயே தங்கி அங்குள்ளாரனைவரையும் ஸ்வரூப சிக்ஷை பண்ணித் தீதில் நன்னெறியாம் திருமால் நெறியை அவர்களுக்குப் போதித்தருளுமாறு பணித்தார். வடுகநம்பியும் ஆசார்யன் பணியைச் சிரமேலேற்று அவர்களனைவரையும் திருத்திப் பணிகொண்டார். அவ்வூருக்குச் சாளக்கிராமம் என்று திருநாமம் சாத்தியருளினர் உடையவர்.

அவ்வூரில் சிலநாள் தங்கியபின் உடையவர் அங்கு நின்றும் பயணமாய்த் தொண்டனூர் போய்ச் சேர்ந்தார். அங்கே தொண்டனூர் நம்பி என்பவர் திருமாளிகையிலே எழுந்தருளியிருந்தார் உடையவர். அப்போது ததீய ஆராதனத்துக்கு அமுதுபடி (அரிசி) தட்டுப்பாடாக உடையவர் கொங்குப் பிராட்டியின் பர்த்தாவுக்கு ஒரு ஸ்ரீமுகம் அனுப்பியருள அவரும் அந்த ஸ்ரீமுகத்தை ஏற்று ஏராளமான அமுதுபடி கொணர்ந்து ஸமர்ப்பித்தார்.

தொண்டனூர் நம்பி உபாதானத்துக்கு (பிக்ஷைக்கு)ப் போய்க்கொண்டிருக்கையில் அப்போது அங்கு வந்திருந்த அவ்வூரரசன் விடலதேவ ராயன் என்பானது குமாரி ஏதோ பிசாசு பிடித்தவளாய் ஆடையின்றியே தெருவில் ஓட, நம்பி ராஜ பத்தினி மிகவும் சோகமுற்றவளாய் அரண்மனை வாயிலிலே நின்றாள். அவள் நிலைக்கிரங்கிய தொண்டனூர் நம்பி அவளுடைய கவலையின் காரணத்தை உணர்ந்து அவளை நோக்கி "எங்களாசாரியர் இராமானுசர் இங்கே எழுந்தருளியிருக்கிறார். அவர் கடாக்ஷம் பட்டால் உனது மகள் நிலை சரியாய்விடும்." என்று தெரிவித்தார். அவளும் மிகவும் சந்தோஷமுற்றவளாய் அரசனிடம் சென்று அத்தை அறிவிக்க அவனும் 'அவ்விராமானுசர் நம் மகளைப் பற்றிய பேயை ஓட்டிவிடில் அவரே நமக்கு ஆசார்யர். அவர் திருவடிகளிலே நான் ஆச்ரயிக்கக் கடவேன்" என்று அவளிடம் கூறித் தான் ராஜா என்ற கர்வத்தில் உடையவரைத் தன் மாளிகைக்கு வரும்படி ஆளனுப்ப முனைந்தான். அவனுடைய தேவி அவனை நோக்கி "பெரியவர்களிடம் நாம்தான் செல்லவேண்டும். அவர்களை ஆணையிடுவது முறையல்ல. அவர்கள் வரமாட்டார்கள்." என்று எடுத்துரைத்தாள். ஆனால் ராஜா தன் ராஜகம்பீரத்திலே "அவர்கள் வரமாட்டார்களோ பார்ப்போம்" என்று கூறி உடையவரைத் தன் மாளிகையில் விருந்துண்ணுமாறு ஆளனுப்பினன். அனுப்பிய சேவகன் உடையவரிடம் அரசனது விருப்பத்தை அறிவித்தான். ஆனால் உடையவர் அவ்வரசனைப்பற்றிய விவரங்களை அறிந்து வைத்திருந்தார். முன் ஒருகால் அவன் டில்லி சக்ரவர்த்தியிடம் சிறைப்பட்டு, பின் ஒருவிரல் அறுபட்டு விடப்பட்டவன். எனவே உடையவர் "அங்கவீனன் கிரகத்திலே உண்ணலாகாது என்ற விதியைக் கூறி" அரசன் மாளிகைக்குச் செல்ல மறுத்துவிட்டார். கேட்ட அரசன் தன் கர்வம் பங்கமாயிற்றென்ற கோபத்தோடு இருந்துவிட்டான்.

பின்பு பெண்ணின் நிலையே கவலையாகவுள்ள அரசி அரசனை அண்டி, "இதென்ன வீண் கோபம். நம்முடைய கர்வம் சாதுவிடம் செல்லுமா. கவலை நமக்கல்லவா? கர்வத்தை விடுங்கள். வாருங்கள். நாம் போய் அம்மகானை வணங்கிப் பிரார்த்திப்போம்" என்று கணவனுக்கு இதம் கூறினள். அரசனும் தன்னுள்ளே ஆராய்ந்து தன் தவறை உணர்ந்து தன் பத்னியுடன் தொண்டனூர் நம்பி திருமாளிகைக்குச் சென்று உடையவர் திருவடிகளிலே பத்னியோடு தெண்டனிட்டு, தன் மகள் நிலையை விண்ணப்பித்து உடையவரைத் தன் மாளிகையில் பொன்னடி சாத்தி மகளைப்பற்றிய தேவதையை விரட்டவேண்டுமென்று பலபடியாகப் பிரார்த்தித்தான். உடையவரும் தாம் யோசனை செய்து கூறுவதாகச் சொல்லி அவனை அனுப்பி விட்டார். அரசன் போனபின் தொண்டனூர் நம்பி உடையவரிடம் அப்பெண் நிலை மிகவும் பரிதாபமாக விருக்கிறது. அதன் தாயுடைய வேதனையை தேவரீர் அவச்யம் போக்கியருள வேண்டும் என்று புருஷ்காரம் செய்ய, உடையவரும் மனமிசைந்து அரசன் மாளிகைக்கெழுந்தருளினர். அரசன் அவரை சகல மரியாதைகளுடன் வாசலில் வரவேற்று உள்ளே கொண்டு போய் ஆசனத்தில்

எழுந்தருளப்பண்ணி அவர் திருவடிகளிலே பத்னியும் தானுமாக வணங்கி நின்றான். அவன் மகளும் நிர்வாணையாய் ஏதேதோ புலம்பிக் கொண்டு நின்றாள். தொண்டனூர் நம்பி தீர்த்தம் கொணர்ந்து உடையவர் திருவடிகளை சோதித்துஸ்ரீ பாத தீர்த்தம் சேர்த்து அதை கையில் ஊற்றி அப் பெண் முகத்திலே தெளித்தார். அவ்வளவில் பெண்ணின் புலம்பல் நின்றது. அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். தன்னையும் பார்த்துக் கொண்டாள். ஆடையின்றி இப்படி அனைவர் முன்னும நிற்கிறோமே என்ற லஜ்ஜை மேலிட உள்ளே ஓடினாள். புடவையை உடுத்து மீண்டு தெளிந்த முகத்தோடு வந்தாள். நேரே உடையவர் திருவடிகளிலே விழுந்து கிடந்தாள். உடையவரும் அவளைக் குளிரக் கடாக்ஷித்து ஆசீர்வதித்து எழுந்திருக்கும்படி நியமிக்க அவளும் எழுந்து அருகிலே ஒதுங்கிஉடையவரைநோக்கி க்கை கூப்பி நின்றாள். நிகழ்ந்தவற்றையெல்லாம் நேரே வியப்போடு கண்டு நின்ற விடலதேவன் தன் பத்னியோடு உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம் போல் விழுந்து கிடந்தான் உடையவரும் அவனைக் கடாக்ஷித்து அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்று திருநாமம் சூட்டி அவனை ஆட்கொண்டருளினார். அதுவரை சமணனாக இருந்த விடலதேவராயன் வைஷ்ணவ சின்னங்கள் தரித்து விலக்ஷணனானான்.

இதனை உணர்ந்த அவனுடைய குருக்களான சமண சந்நியாசிகள் பன்னீராயிரம் பேர் ஒரு திரளாக வந்து ''எங்கள் அரசனை ஏதோ மயக்கி உமக்கடியாளாக்கியமையை ஒப்புக்கொள்ளோம். எங்களை வாதில் வென்றாலே விடுவோம்'' என்று உடையவர் திருமுன்பே கூச்சலிட்டுக் குழப்பினர். பார்த்தார் உடையவர். வந்தவர் ஒருவர் இருவரல்ல. இத்தனை பேருக்கும் தனித்தனியாக வாதப்போர் அளிக்க நாள் காணாது. நம் திவ்ய சக்தியைக் காட்டவேண்டியதுதான் என்று தீர்மானித்தார். அரசனை அழைத்து ஒரு பெரிய மண்டபத்திலே ஒரு பகுதியைத் திரையிட்டு மறைப்புச் செய்து மறைந்த பகுதியிலே க்ஷமணர்களை இருக்கச் செய்து அனைவருடனும் ஒரே காலத்தில் வாதப் போர் நிகழ்த்துவதாக ப்ரகடனம் பண்ணினார். ஒருவர் ஒரே காலத்தில் பன்னீராயிரம் பேரோடு வாதப் போர் நிகழ்த்த எப்படி முடியும் என்று அரசனும் மற்றையோரும் வியந்தனர். எனினும் எம்பெருமானார் விரும்பியபடியே யாவும் தயாரிக்கப் பெற்றன. திரைமறைவில் எழுந்தருளினார் உடையவர். மறுபுறம் க்ஷமணர்கள். வாதப்போர் துவங்கவேண்டிய நேரம். உடையவர் பேருருளாளனை மனத்திலே தியானித்து அவர் அனுமதி பெற்றுத் தான் எவருடைய அவதாரமோ அவ்வனந்தனது மன்னியபல் பொறிசேர் ஆயிரவாய் வாளரவு மூர்த்தமேயாகி எத்தனை க்ஷமணர்களிருந்தார்களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தலையாக நின்று வாதப் போரை நிகழ்த்தினர். சமணர்கள் ஒருவன் எப்படி நம்மனைவருக்கும் பதில் கூற முடியும் என்று செருக்குடனிருந்தவர்கள் பெருமாள் மூல பலவதையிலே ஒவ்வொருவன் முன்னும் ஒவ்வொரு இராமனாக நின்று போரிட்டபோது ''எங்கணும் தோன்றுகின்றான் எனைவரோ இராமர்? என்று அச்சமும் வியப்பும் எய்திப் போரிட்டு மாண்டது போன்று தம்மொவ்வொருவருக்கும் எதிராக ஒவ்வொரு எம்பெருமானாரின் குரல் பதிலளிக்கக் கண்டும் அவர் கூறும் வாதத்திற்குப் பதிலளிக்க மாட்டாது தயங்கியும் தோற்றுத் தலை குனிந்து தம் அறியாமை நீங்கித் தெளிவு பெற்று உடையவரைப் போற்றிப் பணிந்தனர்.

வாதப்போர் என்னும் செக்கில் த்வயம் என்னும் இரு எருதுகள் பிணைக்கப் பெற்று சுற்றியிழுக்கப் பெற்ற உடையவர் என்னும் செக்கு மரத்தின் வாக்குபலம் என்னும் அழுத்தத்திலே சிக்குண்ட சமணராகிய எள்ளுத்தொகுதி அரைப்புண்டு தம் சக்கை நீங்கித் தெளிந்த தைலமாய்த் திகழ்வுற்றது.

அரசனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உடையவர் மீண்டும் தன் அவதார வடிவிலே நின்று திரையை விலக்கித் தம் கருணை ததும்பும் திருக்கண்களோடு அனைவருக்கும் ஸேவை ஸாதித்தார். விஷ்ணுவர்த்தனன் பத்னி சமேதனாய் உடையவர் திருவடிகளை வணங்கித் தன்னையும் மற்றையோரையும் உடையவர் திருத்திப் பணி கொண்டமைக்குத் தன் நன்றியை அறிவித்து மகிழ்ந்து உடையவருக்கு அவன் நாட்டில் எல்லா வசதிகளையும் அளித்தான்.

இங்ஙனம் உடையவர் அங்கே எழுந்தருளியிருக்கும் போதுஅவர் தம்மோடு கொணர்ந்திருந்த திரு

மண் தீர்ந்து போகும் நிலையேற்படவே உடையவர் மிகவும் கவலையுற்றுர். அன்றிரவு சொப்பனத்திலே திருநாராயணப் பெருமாள் ஸேவை ஸாதித்து "யதுகிரியிலே உம்முடைய வரவை எதிர்பார்க்கிறோம். உமக்குத் தேவையான திருமண் ஏராளமாக அங்கே உள்ளது. சீக்கிரமே வாரும்" என்று அருளிச் செய்து மறைந்தார். வியப்புடன் விழித்த எம்பெருமானுர் விஷ்ணுவர்த்தனராஜனை அழைப்பித்துக் கனவை அவனிடம் சொல்ல அவனும் மிக வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாய் உடையவர் யதுகிரி எழுந்தருள்வதற்குரிய செயல்களில் ஈடுபட்டான். யதுகிரி, வனாந்தரமாய், செல்லப் பாதையின்றி ஒரே காடாய்க் கிடந்தமையின் அரசன் காடுகளை வெட்டித் திருத்திப் பாதையுண்டாக்கி உடையவர் செல்லும் வழியில் அவருக்கு வேண்டிய வசதிகளையும் அமைத்துக் கொடுத்தான். உடையவரும் சீடர் புடைசூழ யதுகிரி எழுந்தருளினுர். ஆனால் அங்கே கோயில் ஒன்றும் காணுமையால் பெருமாள் எழுந்தருளியுள்ள இடம் தெரியாமல் "பெருமாள்தானே அழைத்தார். அப்படியிருந்தும் அவர் இவ்விதம் மறைந்துவிட்டாரே. அவர் இங்ஙனே செய்யும்படி 'என் பிழைத்தான் திருவடியின் தகவினுக்கு' என்றபடி அவர் திருவடிகளுக்கு நாம் என்ன அபராதம் செய்துவிட்டோம் என்று ஏக்குற்று நின்றுர்.

(தொடரும்)

---

## கோயில் நிகழ்ச்சிகள்

### பிரம்மோற்சவங்கள்

சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை : ஸ்ரீ அருணுசலேஸ்வரர் - ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

மாயூரம் : ஸ்ரீ கௌரி மாயூரநாத ஸ்வாமி கோயில்-

இராயவேலூர் ; வேலப்பாடி ஸ்ரீ சித்தி புத்தி சமேத ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயில்.

திருப்புனவாயில் : ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ விருத்தபுரீஸ்வர சுவாமி தேவஸ்தானம்.

பூவனூர் : ஸ்ரீ சதுரங்க வல்லபநாத ஸ்வாமி தேவஸ்தானம்.

காட்டுப்பரூர் : ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

காளையார்கோயில் : ஸ்ரீ சௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ சோமேஸ்வரர் கோயில்.

பூவாளூர் : ஸ்ரீ குங்குமாம்பிகா சமேத திருமூலநாத ஸ்வாமி தேவஸ்தானம்.

நீடாமங்கலம் : ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி கோயில்.

நாகப்பட்டினம் : ஸ்ரீ நீலாயதாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ காயரோகண சுவாமி கோயில்.

திருச்செங்கோடு : ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் கோயில்.

தேலூர் : ஸ்ரீ தேவபுரீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்.

பிக்ஷாண்டார்கோயில் : ஸ்ரீ சௌந்திர பார்வதி சமேத பிக்ஷாடனேஸ்வரர் தேவஸ்தானம்.

வட திருமுல்லைவாயில் : ஸ்ரீ கொடியிடைநாயகி சமேத ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் கோயில்.

திருமோகூர் : ஸ்ரீ காளமேகப் பெருமாள் தேவஸ்தானம்.

திருக்கண்ணபுரம் : ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

திருக்கண்டியூர் : ஸ்ரீ வீரட்டேஸ்வர சுவாமி கோயில்.

திருப்புகலூர் : ஸ்ரீ அக்னீஸ்வர சுவாமி தேவஸ்தானம்